வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 15.04.2024 திங்கட்கிழமை | இதழ் : 106 | பக்கங்கள் : 12

# பொது வேட்பாளர் தெரிவுக்கு சகல கட்சிகளும் ஒன்றிணைக!

## சித்தார்த்தன் எம். பி. அழைப்பு

* வேலன் சுவாமிகள் பொது வேட்பாளருக்கு பொருத்தமானவரல்ல
* பகிஷ்கரிப்பு மூலம் கஜேந்திரகுமார் யாரை ஆதரிக்க முயல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கு அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

எதிர்வரும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு பல கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. ஆரம்பத்தில் இருந்தே எமது நிலைப்பாடும் இதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழ் பொது வேட்பாளர் விடயத்துக்கு

11

# கறுப்பு சித்திரை புத்தாண்டு கல்முனையில் போராட்டம்!

## கறுப்புக் கொடிகளுடன் ஊர்வலம் மூவருக்கு நீதிமன்று தடை உத்தரவு



கல்முனை, ஏப். 15

கல்முனை பிரதேச செயலகத்தின் நிர்வாக நடைமுறைகளுக்கு இடையூறு செய்ய வேண்டாம் எனவும் தங்களுக்கான அதிகாரங்களை சுயாதீனப்படுத்தக் கோரியும் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் 21 ஆவது நாளான நேற்று கறுப்பு சித்திரைப் புத்தாண்டு தினமாக மோட்டார் சைக்கிள் ஊர்வலம் நடத்தப்பட்டது.

11

# திருக்கோணேஸ்வரம் ஆலய வரலாற்று அருங்காட்சியகம் அமைப்பது அவசியம்!

## நினைவேந்தல் நிகழ்வில் தீர்மானம்

திருகோணமலை, ஏப். 15

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வரலாறு குறித்து அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் - இவ்வாறு நேற்று நடந்த நினைவேந்தல் நிகழ்வில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

400 ஆண்டுகளுக்கு முன்பு இதேபோன்றதொரு தமிழ் புத்தாண்டு தினத்தன்று போர்த்துக்கேயரால் திருக்கோணேஸ்வரம் அழிக்கப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் நேற்று விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

11

# 30 வீதத்தினர் நீரிழிவால் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 15

நாட்டில் 30 சதவீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, சிறுவர்களுக்கு இனிப்பு பண்டங்களை

11

# பொது வேட்பாளர் காலத்தின் தேவை

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 15

தமிழ் மக்களின் திடமான அரசியல் கொள்கைக்கு தமிழ் பொது வேட்பாளர் காலத்தின் தேவை - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள அவரின் பணிமனையில் நேற்று நடைபெற்ற புதுவருட நிகழ்வில் கைவிஷேசம் வழங்கி வைத்து கருத்து வெளியிட்டபோதே

11



வரலாற்று பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றவேளை...

*ரி - 20 உலகக் கிண்ணம்:*

# இலங்கை உத்தேச அணியில் வியாஸ்காந்த் இடம்பிடிப்பு!

கொழும்பு, ஏப். 15

இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான 32 வீரர்களை கொண்ட இலங்கை முன்னோடி அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான விஜயகாந்த் வியாஸ்காந்த் இடம்பிடித்துள்ளார்.



சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் இருபது - 20

11

# வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் காலமானார்!

யாழ்ப்பாணம், ஏப். 15

வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நடனேந்திரன் நேற்றிரவு யாழ். போதனா மருத்துவமனையில் காலமானார்.

நேற்று அதிகாலை திடீர் சுகயீனமுற்ற அவர் அம்புலன்ஸ் மூலம் யாழ்.



போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு, அதி தீவிர

11

# ஜனாதிபதி தேர்தல் மாற்றத்துக்கானது!

## சுமந்திரன் எம். பி. சொல்கிறார்

வடமராட்சி, ஏப். 15

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒரு மாற்றத்துக்கான தேர்தலாகும். இதனை இலாவகமாக கையாள வேண்டும்" - இவ்வாறு கூறிய இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், " தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் நாட்டில் மீண்டும் இனவாதம் ஏற்படலாம்", என்றும்

11

# இலங்கை கடன் மறுசீரமைப்பு; வாஷிங்டனில் கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 15

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பில் வாஷிங்டனில் விசேட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் இன்று திங்கட்கிழமை உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மத்திய ஆண்டு மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

அதன்போது, நாட்டின் கடன் மறுசீரமைப்பு

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

பண்டாரநாயக்காவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருக்கும்போது தந்தை செல்வா அவருடன் ஒப்பந்தம் போட்டால் எதிர்க்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி ஊர்வலம்போகும் - அதனை எதிர்க்கும். இதே போல ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் போட்டால் சுதந்திரக் கட்சி எதிர்க்கும். இதைத்தான் பல தசாப்தங்களாக நாம் கண்டுகொண்டிருக்கின்றோம். ஆளும் கட்சி தமிழர்களுக்கு தீர்வைத் தருகின்றோம் என்றால் எதிர்க்கட்சி எதிர்க்கும், பின்னர் தீர்வைத் தர விரும்பிய ஆளும் கட்சி எதிர்க்கட்சிக்கு போய்விட்டால் முன்னர் எதிர்க்கட்சியிலிருந்து பின்னைய ஆளும் கட்சி தீர்வை முன்வைத்தால் எதிர்க்கட்சி எதிர்க்கும்.

ஆனால், இப்போது எல்லாக் கட்சிகளும் இந்தத் தீர்வு விடயத்தில் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றன என்பது வேறு சங்கதி.

இந்த “போர்முலா” இப்போது ஒரு கட்சிக்குள்ளேயே வந்துவிட்டது. அதுவும் நான் சொல்ல வருவது தெற்கு தேசியக் கட்சிகளுக்குள் நடக்கும் சங்கதியை அல்ல. நமது தமிழ் அரசு கட்சிக்குள் நடக்கும் விவகாரம் பற்றியது.

தமிழ் அரசு கட்சியில் இதற்காகத்தான் தலைவர் தெரிவுகளுக்கு தேர்தல் நடத்தக்கூடாது என்பதை தந்தை செல்வா எழுதப்படாத கொள்கையாக முன்வைத்திருந்தாரோ தெரியவில்லை. தமிழ் அரசு கட்சியின் தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக, “உட்கட்சி ஜனநாயகம் என்பது அவசியமானது - தமது கட்சியில்தான் பலர் தலைவர் பதவிக்கு தகுதியானவர்கள் இருக்கிறார்கள்.” என்றெல்லாம் பேசப்பட்டது. கட்சியின் பதவிகளுக்காக தேர்தல் நடத்துவது உட்கட்சி ஜனநாயகம் என்பது தந்தை செல்வாவுக்கு தெரிந்திருக்கவில்லையோ என்று அப்போது இந்த ஊர்க்குருவி நினைத்திருந்தது. ஆனால், உட்கட்சி ஜனநாயகம் என்பது கட்சியை சிதைத்து சின்னாபின்னப்படுத்திவிடும் என்பதால்தான் தந்தை செல்வா அந்தக் காலத்தில் கட்சிப் பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவுசெய்யும்போது தேர்தல் நடைபெறாமல் பார்த்துக் கொண்டார் என்பதை இப்போது புரிந்துகொள்ள முடிகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது பற்றி அண்மைக் காலமாக பல்வேறு தரப்பினரும் பிரஸ்தாபித்து வருகின்றனர். சிலர் அதன் பாதகங்களைக் கூறினாலும் பரவலாக பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் பலரும் ஆதரவாகக் கருத்துக் கூறிவருகின்றனர். இந்நிலையில், தமிழ் பொதுவேட்பாளர் என்பது “விழுந்துகிடக்கும் ராஜபக்ஷக்களை மீண்டும் எழுப்பிவிட அவர்களுக்காக செய்யப்படும் ஒரு மறைமுக வேலைத்திட்டம் இது“ என்று தமிழ் அரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட எம். பி. சுமந்திரன் கூறிய செய்தி ஒரு கொழும்பு தமிழ் பத்திரிகையில் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வந்தது. ஆனால், அதே பத்திரிகையின் உள்பக்கத்தில் கட்சியின் மற்றுமொரு எம். பியும் தலைவர் பதவிக்கான தேர்தலில் சுமந்திரனுடன் போட்டியிட்டு அவரை தோற்கடித்தவருமான சிவஞானம் சிறீதரன், பொதுவேட்பாளர் அவசியம் என்பது குறித்து தெரிவித்திருந்தமை ஒரு சிறிய செய்தியாக வெளிவந்திருந்தது. அது அந்தப் பத்திரிகையின் “தர்மம்” ஆக இருக்கலாம்.

அதுவல்ல நாம் இன்று சொல்லவருவது,

நேற்றைய தினம் காலை ஒரு செய்தி ஈழநாடு ஆசிரிய பகுதிக்கு வந்தது. சிவஞானம் சிறீதரன் நேற்று கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பு தொடர்பான செய்தி அது.

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதனூடாக தமிழ் மக்களின் திடமான அரசியல் கொள்கையை சர்வதேசத்துக்கு ஒரு செய்தியாக சொல்ல முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்“ என்றது அந்தச் செய்தி.

இந்தச் செய்தி ஈழநாடு ஆசிரிய பீடத்துக்கு வந்துசேர்ந்த சில மணி நேரங்களில், மற்றுமொரு செய்தி வடமராட்சி நிருபரிடமிருந்து வந்தது.

“தேர்தல்கள் மூலமாக ஆட்சி முறையிலும் நாட்டினுடைய சரித்திரத்திலும் மாற்றம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும்”

என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி - மந்திகை மடத்தடியிலுள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் தொகுதி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார் - என்றது அந்தச் செய்தி.

அப்போதுதான், சுதந்திரக் கட்சி ஒன்றை கூறினால் ஐக்கிய தேசியக்கட்சி அதனை எதிர்ப்பது என்ற “சித்தாந்தம்“ நமது கட்சிக்குள்ளேயே வந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றியது.

ஏற்கனவே, இந்தப் பத்தியில் எழுதியதுபோல தமிழ் அரசு கட்சி நீதிமன்ற படிகளிலிருந்து இறங்கிவர எத்தனை மாதங்கள் ஆகின்றதோ தெரியவில்லை. அதுவரை முன்னைய தலைவர்தான் தமிழ் அரசுக்கு தலைவராக தொடரப் போகின்றார். இதுகாலவரை “தலைவராக“ இருந்தபோது செய்ததுபோல கட்சிக்குள் நடப்பவற்றையெல்லாம் அமைதியாக இருந்து பார்த்துக்கொண்டு அவற்றை கடந்து செல்லாமல், கட்சியின் முக்கிய தலைவர்களை அழைத்து, இந்தப் பொது வேட்பாளர் விடயத்தில் கட்சி என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அவ்வாறு இல்லாமல், கட்சியினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை பொதுவெளியில் சொல்லிக்கொண்டிருந்தால், கட்சி மீது மக்களுக்கு இருக்கின்ற கொஞ்ச நம்பிக்கையும் மேலும் தளர்வடையவே செய்யும்.

கட்சியின் முடிவு எதுவாக இருந்தாலும் பின்னர் கட்சியினர் அந்த முடிவை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதுதான் நல்லது.!

**- ஊர்க்குருவி.**






படங்கள் - ரா. ராகவ்

பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா புதுவருட தினமான நேற்று நடைபெற்றவேளை...

# யாழில் மூன்று தீவுகளுக்கு மேலாக சூரியன் உச்சம்

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் நண்பகல் 12.10 மணியளவில் நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, மணற்காடு, உடுத்துறை ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக சூரியன் உச்சம் கொடுத்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சூரியனின் வடதிசை நோக்கிய தோற்ற இயக்கம் காரணமாக, ஏப்ரல் 05 ஆம் திகதியிலிருந்து இன்றையதினம் 15 ஆம் திகதி வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளதாக குறித்த திணைக்களம் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

இஸ்ரேலில் போர் பதற்றம்

# தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம்

டெல் அவிவ், ஏப். 15

இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் தூதரகம் அவதானம் செலுத்தி வருவதாகவும், இது தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் எனவும் இலங்கைத் தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் தொடர்ந்து ஆளில்லா விமானம் மூலமும் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருவதால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அந்நாட்டிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமால் பண்டார அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையர்கள் குழுவுடன் டுபாயிலிருந்து டெல் அவிவ் நோக்கிப் பயணித்த விமானம் தொடர்பான தகவல்களை குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

டுபாய்க்கு சொந்தமான குணு - 1625 விமானம் நேற்று முன்தினம் இரவு 20. 10 மணியளவில் டெல் அவிவ் நோக்கிப் பயணித்த போது இந்தத் தாக்குதல் பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நிமால் பண்டார தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், விமானத்தை திசை திருப்பி டுபாய்க்கு பறக்கவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தனது அறிவிப்பில் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி அந்த விமானத்தில் இஸ்ரேலுக்கு வரவிருந்த இலங்கையர்கள் பற்றிய தகவல்களை வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் 13 ஆம் திகதி ஜெருசலேம் சன்கர் விளையாட்டரங்கில் சுமார் இரண்டாயிரம் இலங்கையர்களின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு ஒன்று இடம்பெற்றதாகவும் அதன் பின்னர் அவர்கள் தமது இல்லங்களுக்குச் சென்றதாகவும் இலங்கைத் தூதுவர் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கிடையில், ஈரான் நேற்று முன்தினம் இஸ்ரேல் மீது 500 இற்கும் மேற்பட்ட ஆளில்ல விமானம் மூலமும் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை நடத்திய நிலையில் இதுவரை ஒரு சிறுமி மட்டுமே காயமடைந்ததாக அவர் கூறியுள்ளார்.

(எ)

ஈழநாடு
Eelanadu
15.04.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தேர்தல் பகிஷ்கரிப்பு ஏன் உகந்த வழிமுறையல்ல?

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார். இதில், ஆச்சரியம் இல்லாவிட்டாலும் இவ்வாறான பகிஷ்கரிப்பு கோரிக்கையின் பின்னணி தொடர்பில் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றநிலையில் அதனுடன் இணைந்து நிற்காமல் ஏன் இவ்வாறான பகிஷ்கரிப்பு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது?

ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்தல் என்பது 2005இல்தான் இலங்கைத் தீவில் ஒரு தீர்மானகரமான அரசியல் தலையீடாக கைக்கொள்ளப்பட்டது. அதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பே காரணம். அன்றைய சூழலில் விடுதலைப் புலிகளுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று, தேர்தலை பகிஷ்கரிப்பது - அடுத்தது, ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி தேர்தலை எதிர்கொள்வது. ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பு தேர்தல் பகிஷ்கரிப்பையே ஒரு தெரிவாகக் கொண்டிருந்தது.

ஏன்? பதில் இலகுவானது. மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தேவையான பெருபான்மையில் வெற்றிபெற வேண்டும் -ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின் இலக்காக இருந்தது. அந்த அடிப்படையில்தான் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்னும் நிலைப்பாட்டை அவர்கள் எடுத்தனர். ஏனெனில், 2005இல் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தால் ரணில் மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருமே 50 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருக்க முடியாமல் போயிருக்கும். இந்த நிலையில், இரண்டாவது எண்ணிக்கைக்கு நிலைமைகள் சென்றிருக்கலாம் அவ்வாறானதொரு சூழலை விடுதலைப் புலிகள் அமைப்பு விரும்பியிருக்கவில்லை. முதல் வாக்கெடுப்பிலேயே ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைய வேண்டும் என்னும் இலக்கிலேயே விடயங்களை நகர்த்தினர். இதன் காரணமாகவே அவர்கள் பகிஷ்கரிப்பை ஒரு கருவியாகக் கைக்கொண்டனர். ஏனெனில், தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்கும்போது ஒரு தென்னிலங்கை வேட்பாளர் அறுதிப் பெருபான்மையில் வெற்றிபெறுவார். அதாவது, தமிழ் மக்களின் வாக்குகள் ஒருவரின் வெற்றிக்கு தேவையாக இருக்கின்ற சூழலில் மட்டுமே இது சாத்தியப்படும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், 2015 தேர்தலிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான முன்னணி பகிஷ்கரிப்பையே அறிவித்தது. உதாரணமாக ஒருவேளை, தமிழ் மக்கள் 2015இல் தேர்தலை பகிஷ்கரித்திருந்தால் முதல் வாக்கெடுப்பில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றிருக்க முடியாது. அடிப்படையில் தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது தாங்கள் விரும்பும் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரை வெற்றிபெறச் செய்வதற்கு மட்டுமே பயன்படும் - நிச்சயமாக தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும் - தமிழ் மக்களின் பேரம் பேசும் வல்லமையை வெளிப்படுத்துவதற்கும் ஒருபோதுமே பயன்படாது.

அன்றைய சூழலில், விடுதலைப் புலிகளின் இலக்கு தமிழ் மக்களின் ஜனநாயக பலத்தை காண்பிப்பது அல்ல - மாறாக, அன்றைய அரசியல் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் ஓர் உத்தியாகவே தேர்தல் பகிஷ்கரிப்பை அவர்கள் கையிலெடுத்தனர். உண்மையில், புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பு நிலைப்பாடு ஓர் இராணுவ நகர்வுக்கான முன் தயாரிப்பாகும். மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதால்தான் மேற்குலகின் சமாதான முன்னெடுப்பிலிருந்து கொழும்பு வெளியேறியது. ஒருவேளை ரணில் வெற்றிபெற்றிருந்தால், ரணில் ஒருபோதும் அதனை செய்திருக்க மாட்டார் - செய்யவும் முடியாது. இதனை நன்கு கணித்த காரணத்தாலேயே புலிகள் அன்றைய சூழலில் அவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொண்டனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது அடிப்படையில் தாங்கள் விரும்பும் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கானது. ஆனால், பொது வேட்பாளர் என்பது தமிழ் மக்களின் ஆணையை வெளிப்படுத்துவது. தமிழ் மக்கள் கொழும்பின் அதிகார மையத்தின் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை ஜனநாயக வழிமுறையிலேயே நிராகரிப்பது. தமிழ் மக்களை இலங்கைத் தீவில் ஒரு தேசமாக நிரூபிப்பது. தேசமென்று வெறுமனே கூறிக் கொண்டிருப்பதால் ஓர் இனம் தேசமாகிவிடாது. தேசம் தொடர்பில் பேசிவரும் கஜேந்திரகுமார் அணி ஏன் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியுடன் தன்னை இணைத்துக் கொள்ள முடியவில்லை? அவ்வாறாயின் அவர்களின் இலக்கு வேறு - அது நிச்சயமாக, தாங்கள் விரும்பும் ஒரு தென்னிலங்கை வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்கான பங்களிப்பாக மட்டுமே இருக்க முடியும்.

# அதிவேக நெடுஞ்சாலைகளால் 4.4 கோடி ரூபாய் வருமானம்!

*கொழும்பு, ஏப். 15*

அதிவேக நெடுஞ்சாலைகளால் நேற்று முன்தினம் ஒருநாளில் மட்டும் 4 கோடியே 44 இலட்சம் ரூபாய் வருமானமாகப் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதிவேக நெடுஞ்சாலைகளின் போக்குவரத்து 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அதிவேக நெடுஞ்சாலையின் செயல்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் மாத்திரம் அதிவேக நெடுஞ்சாலைகளில் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் வாகனங்கள் போக்குவரத்து செய்தன. இதனூடாக 4 கோடியே 44 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் கிடைத்த வருமானம் 15 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிவேக நெடுஞ்சாலைகளில் செலுத்துவதற்கு தகுந்த வாகனங்களை மாத்திரம் செலுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளியேறும் வாயில்களுக்கு அருகில் நிலவும் அதிக வாகன நெரிசலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலையின் செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

(ஐ)

# ஆதிவிநாயகருக்கு நேற்று தேர்!

*வவுனியா, ஏப். 15*

வவுனியா - வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் திருக்கோவில் தேர்த்திருவிழா புதுவருட தினமான நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டு புத்தாண்டு வழிபாட்டிலும் தேர்திருவிழாவிலும் பங்கேற்றனர்.

வவுனியாவில் உள்ள முக்கிய திருத்தலங்களில் ஒன்றான வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் திருக்கோவிலின் பெருந்திருவிழா கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆதிவிநாயகர் பெருமானுக்கு மேளதாள வாத்தியங்கள் முழங்க விசேட அபிடேகங்கள் நடைபெற்று, பெருமான் உள்வீதி வலம் வந்து, வெளி வீதியில் பிரவேசித்து அலங்க



ரிக்கப்பட்ட தேரில் அமர்ந்து அடியாவர்களுக்கு அருள்பாலித்தார். இதன்போது, அடியார்கள் சிதறு தேங்காய் அடித்தும், அங்கபிரதட்ஷை செய்தும், கற்பூரச் சட்டி ஏந்தியும் அடியழித்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

(ஐ)

# மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

*புத்தளம், ஏப். 15*

புத்தளம் - மஹகும்புக்கடவல பகுதியில் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார்.

மஹகும்புக்கடவல - ஹோம்ப கஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 56 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் தனது விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்குதலுக்குள்ளானார்.

மின்னல் தாக்கி பாதிப்புக்குள்ளான நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மஹகும்புக்கடவல கிராமிய வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

(எ)

# இரு குழுக்களின் மோதலில் ஒருவர் குத்திக் கொலை!

*கொழும்பு, ஏப். 15*

இரு குழுக்களிடையே ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.


இரத்தினபுரி - பலாங்கொடை - பெட்டிகல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த 32 வயது நபரே உயிரிழந்தவராவர். இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் இரத்தினபுரி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஏப்ரல் - 15 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - ஏப்ரல் 02
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சப்தமி




**மேடம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சுவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். அதிகாரிகளுக்கு உதவுவீர்கள்.

**இடபம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**மிதுனம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வருங்கால திட்டத்தில் யஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கடகம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**சிம்மம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். முயற்சியால் முன்னேறுவீர்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**விருட்சிகம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மறைமுக பிரச்னைகள் வரக்கூடும். ஆதாயம் தரும் நாள்.

**தனுசு**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**மகரம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல், டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக போய் முடியும். வியாபாரத்தில் லாபம் குறையும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவை.

# தேர்தலுக்கு பின்னர் அ. தி. மு. க. தினகரனின் கைக்கு வந்துவிடும்

## அண்ணாமலை சொல்கிறார்



தேனி, ஏப். 15

"தேர்தல் முடிவுக்கு பின், அ. தி. மு. க. உண்மையான தலைவர் கைக்கு வரப்போகிறது" என்று தேனியில் பாரதிய ஜனதாவின் தமிழக தலைவர் அண்ணாமலை பேசினார்.

தேனி தொகுதி பா. ஜ. கூட்டணி வேட்பாளர் தினகரனை ஆதரித்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில், 2026இல் ஆட்சி மாற்றத்திற்கான அடித்தளம் இந்த பாராளுமன்றத் தேர்தலில் போடப்படுகிறது. ஸ்டாலின் தலைமையில் உள்ள தி. மு. க., பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. இரண்டும் ஒரு கட்சிதான். இரு கட்சியிலும் தொண்டர்கள் பிடிப்பாக இருக்கலாம். ஆனால் தலைவர்கள் ஒன்றுதான். பாராளுமன்றத் தேர்தலில் தினகரனை தோற்கடிக்க இரு கட்சி வேட்பாளர்களும் ஒன்றிணைந்துள்ளனர். இங்கு அ. தி. மு. கவினர் வாக்கு தினகரனுக்கு கிடைக்கப் போகிறது. இரு கட்சி தலைவர்களும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்வதுபோல் நாடகம் நடத்துகின்றனர்.

தேர்தலுக்கு பின்னர் பழனிசாமி தலைமையிலான அ. தி. மு. க. இருக்காது. தொண்டர்கள் தினகரன் பின்னிற்க போகின்றனர். ஜூன் 4இற்கு பின் இது நடக்கும். சட்டசபை தேர்தலில் தினகரன் எங்களுடன் இருந்திருந்தால் ஸ்டாலின் முதல்வராகி இருக்கமாட்டார். யார் எட்டப்பன் என்பதில் தொண்டர்கள் தெளிவாக புரிந்துள்ளனர். இந்த கூட்டணி 2026இல் அரசியல் மாற்றம் வரும் வரை இருக்கும் - என்றார். (ஐ)

# அ. தி. மு. கவை அழிக்க நினைப்பவர்களே அழிவர்!

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சென்னை, ஏப். 15

அ. தி. மு. கவை அழிக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள். அ. தி. மு. க. காணாமல் போய்விடும் என சிலர் சொல்கிறார்கள். யார் காணாமல் போவார்கள் என்பது ஜூன் 4ஆம் திகதிக்குப் பின் தெரியும்" என எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சிதம்பரத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட போது இவ்வாறு அவர் கூறினார்.

மேலும், அ. தி. மு. கவை சீண்டிப் பார்க்காதீர்கள். அப்படிப் பார்த்தால் என்ன ஆகும் என்பதை தொண்டர்கள் காட்டுவார்கள். இந்தியாவிலேயே அதிக தொண்டர்களை கொண்ட ஒரே கட்சி அதிமுக தான்.

வெயில் காலத்தில் உஷ்ணம் அதிகமாகிவிட்டதால் சிலர் எதை எதையோ உளறிக் கொண்டிருக்கிறார்கள். பூச்சாண்டிகளுக்கெல்லாம் அதிமுக என்றைக்கும் பயப்படாது. 30 ஆண்டு காலம் ஆட்சி செய்த கட்சியை மிரட்டிப் பார்க்கிறார்கள். இந்த வேலையெல்லாம் இங்கே எடுபடாது- என்றும் தெரிவித்தார்.

# அனைவரும் சமம் என்பதே சனாதனம்

## ஆளுநர் ரவி



சென்னை, ஏப். 15

சனாதன தர்மம் எந்தவோர் ஏற்றத் தாழ்வையும் வலியுறுத்தவில்லை. நாம் அனைவரும் ஒன்று என்றுதான் கூறுகிறது என ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்தார்.

பாரதம் என்பது ரிஷிகளாலும், முனிவர்களாலும் உருவாக்கப்பட்டது. அனைவரும் ஒரு குடும்பம் என்கின்ற கருத்து இந்து வேதங்களில் கூறப்பட்டுள்ளது. பாரதம் பிறந்தது இந்தியாவுக்காக மட்டும் அன்று, உலகுக்கே வெளிச்சத்தை அளிக்கவே பிறந்தது. ஆங்கிலேயர்கள் காலத்தில் பாரதத்தின் கலாசாரம் மாறியது.

பாரதம் என்பது சனாதனத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. சமாதனம் வீழ்ந்தால் பாரதம் வீழும் என சிறீ அரவிந்தர் கூறினார். சனாதன தர்மம் எந்தவோர் ஏற்றத் தாழ்வையும் வலியுறுத்தவில்லை. நாம் அனைவரும் ஒன்று என்றே சனாதனம் கூறுகிறது. உலகம் ஒரு குடும்பம் என கூறுவதே சனாதனம்- என்றார். (ஐ)

# மோடி மீண்டும் வெல்வது பா. ஜ. கவுக்கே நல்லதல்ல

## முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஏப். 15

என்னைப் பொறுத்தவரை மோடி வெற்றி பெறுவது இந்தியாவுக்கு மட்டுமல்ல, பா. ஜ. கவுக்கே நல்லதல்ல" என்று தமிழக முதல்வர்மு.க.ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் பிரபல ஆங்கில நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "மக்களவைத் தேர்தல் களத்தில் திமுக முதன்மையான இடத்தில் இருக்கிறது. அதிமுக வெகுதூரம் தள்ளி இரண்டாம் இடத்தைப் பிடிக்கப் போராடுகிறது. மற்ற கட்சிகள் கனவு உலகத்தில் மிதந்து கொண்டிருக்கலாம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மீன்பிடி தடைக் காலம் தமிழ்நாட்டில் ஆரம்பம்!

சென்னை, ஏப். 15

தமிழ்நாட்டில் மீன்பிடி தடைக்காலம் இன்று ஆரம்பமாகிறது.

மன்னார் வளைகுடா கடலில் தற்போது மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலமாகும். இந்த காலகட்டத்தில் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்தால் மீன் வளம் குறைந்து விடும். இதனை கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் ஏப்ரல் 15ஆம் திகதி முதல் ஜூன் 14ஆம் திகதி வரை 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் உள்ளது.

இந்த மீன்பிடி தடைக் காலத்தில் விசைப்படகுகள் மீன்பிடிக்கச் செல்லாமல், துறைமுகத்தின் கரையோரம் நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவைக்கப்படும். அதே நேரத்தில், மீன்பிடித் தடைக் காலத்தைப் பயன்படுத்தி, மீனவர்கள் தங்களது விசைப்படகுகளை பழுது பார்க்கும் பணியில் ஈடுபடுவர். எனினும், வள்ளம், கட்டுமரம், பைபர் படகுகள் உள்ளிட்ட நாட்டுப் படகுகளில் மட்டும் மீனவர்கள் கரையோரப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்வர். (ஐ)

# புத்தாண்டை வரவேற்று சிறப்பு வழிபாடுகள்








யாழ்ப்பாணம், ஏப். 15


குரோதி வருடப்பிறப்பை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை விசேட பூஜைகளைத் தொடர்ந்து முருகப்பெருமான் உள்வீதி, வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

இதன்போது, ஏராளமான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர்.


இதேவேளை, யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்து ஆலயங்களில் நேற்று முன்தினம், நேற்றும் வருடப்பிறப்பை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. (எ)







தெல்லிப்பழை சிறீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தங்கமுலாம் பூசப்பட்ட கொடித்தம்பம் புதுவருட பிறப்பு நன்னாளில் நிறுவப்பட்டது. இதேவேளை அம்மனுக்கு நேற்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சித்திரை புதுவருடப்பிறப்பு விசேட பூஜைகள் இடம்பெற்றன.



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் புதுவருடப் பிறப்பு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

# பேரினவாதிகளுக்கான தேர்தலில் தமிழர்கள் விலகியிருக்க வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் விலகியிருக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

அன்னை பூபதியின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவு முற்றத்திலிருந்து தனது பயணத்தை நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்தது. இதில் கலந்துகொண்டு செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையில் என்ன வேறுபாடு? இருக்கிறது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

தற்போது, ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்திருக்கிறது. இந்நிலையில் வடக்கு - கிழக்கில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் அதிகம் பேசப்படுகிறது. ஆனால், எங்களைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும். இது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.




இலங்கையில் கடந்த 75 வருடங்களில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த பேரினவாதிகள் ஒருபோதும் தமிழர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டது கிடையாது - என்றார். (எ)

# சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வாகனங்களை காணவில்லை!

கொழும்பு, ஏப். 15

**சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வெவ்வேறு வாகனங்கள் போதிய தகவல்கள் இன்றி காணாமல் போயுள்ளன என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

சுகாதார அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு பணிமனையால் மேற்கொள்ளப்பட்ட விசேட தணிக்கையில் 679 வாகனங்கள் காணாமல் போனமை தெரிய வந்தது.

240 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு கணக்காய்வுக்கு அறிவித்துள்ள போதிலும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் போதிய தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக கணக்காய்வு பணிமனை தெரிவித்துள்ளது.

தேசிய கணக்காய்வு பணிமனையால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுகாதார அமைச்சின் கணக்காய்வு அவதானிப்புகள் ஏனைய 439 வாகனங்கள் தொடர்பில் நான்கு வருடங்களாக எந்தத் தகவலும் கண்டறியப்படவில்லை என தெரியவந்துள்ளது. (ஐ)

# இந்திய முட்டை ரூ. 36ஆக நிர்ணயம்!

கொழும்பு, ஏப். 15

இந்திய முட்டை ஒன்றை 36 ரூபாய்க்கு விற்பனை செய்ய லங்கா சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் இந்திய முட்டைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதே வேளை, உள்ளூர் முட்டைகளின் விலையும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக 40, 45 ரூபாயாகக் குறைக்கப்பட்ட உள்ளூர் முட்டையின் விலை புத்தாண்டின் போது 50 முதல் 60 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

மக்களுக்கு தேவையான முட்டைகளை தட்டுப்பாடின்றி வழங்கவும், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலும் இந்திய முட்டை ஒன்றின் விலையை 42 ரூபாயில் இருந்து 36 ரூபாயாகக் குறைக்க லங்கா சதொச நடவடிக்கை எடுத்துள்ளது.



# யாழ். நகரின் தூய்மை குறித்து அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ். நகரப்பகுதியின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்துள்ளார்.

புதுவருடப் பிறப்பு தினமான நேற்றுக் காலை குறித்த பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

யாழ். நகரின் தூய்மை பராமரிப்பு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் பல தரப்பட்டவர்களிடமிருந்து முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்காகவே அமைச்சர் சென்றிருந்தார்.

குறிப்பாக யாழ். நகரின் மையப்பகுதி மற்றும் புதிய மாநகர சபைக் கட்டட வளாகம், அதனை அண்டிய சுற்றுவட்டத்தின் நீர் வடிந்தோடும் வடிகால்கள் உள்ளிட்டவற்றை பார்வையிட்ட அமைச்சர் அவற்றைத் தூய்மையாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் புதுவருட தினமான நேற்று போராட்டம்!




வவுனியா, ஏப். 15

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் புதுவருட தினமான நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில், தொடர்ச்சியாக போராட்டம் நடைபெறும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட அவர்களின் போராட்ட பந்தலில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

2 ஆயிரத்து 611ஆவது நாளான நேற்றைய தினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கருத்து வெளியிடுகையில்,

“அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் குழு ஒன்று அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது எமக்கு மகிழ்ச்சியான விடயம். இவர்கள் சேர்ந்து, தமிழர்கள் மீதான அமெரிக்கக் கொள்கையில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி செயலாளர் பிளிங்கனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர்.

இலங்கையில் நடந்ததும் - நடப்பதும் இனப்படுகொலை என்பதை அவர்கள் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன்தமிழர்கள் அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் உரிமை உள்ளது. அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு தகுதியானவர்கள். இதன் மூலம் தமிழர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

அமெரிக்காவில் உள்ள நமது தமிழர்களின் ஆதரவுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் மற்றும் 10 அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே தமிழ் அரசியல்வாதிகள் மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைக்க வேண்டும் - என்று கூறினர். (ஐ)

# வெளி மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு விசேட ரயில் சேவை

கொழும்பு, ஏப். 15

வெளி மாகாணங்களில் இருந்து கொழும்புக்கு வரும் மக்களுக்கான மேலதிக ரயில் சேவைகள் நேற்று ஆரம்பமாகின என்று ரயில்வே பிரதி பொது முகாமையாளர் நந்தன இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

இதன்படி, நேற்றும் இன்றுமாக பதுளை, காலி மற்றும் பெலியத்தை ரயில் நிலையங்களிலிருந்து கொழும்பு கோட்டை வரை 8 மேலதிக ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன.

இது தவிர 16ஆம் திகதி முதல் அலுவலக ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என ரயில்வே திணைக்களம் மேலும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இன்றைய தினம் காலை 7.45 - பதுளை முதல் கோட்டை வரை, மாலை 5.20 - பதுளை முதல் கோட்டை வரை, காலை 6.00 - காலி முதல் கோட்டை வரை, காலை 8.10 - பெலியத்தை முதல் கோட்டை வரை, மாலை 1.50 - காலி முதல் கோட்டை வரை, காலை 6.15 - காலி முதல் கோட்டை வரை ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இதேபோன்று நாளை காலை 7.45 - பதுளை முதல் கோட்டை வரை, மாலை 5.20 - பதுளை முதல் கோட்டை வரை ரயில் சேவைகள் நடைபெறும் அத்துடன், அலுவலக ரயில் சேவைகள் வழமை போல் நடைபெறும். (ஐ)

# அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஏப். 15

கஞ்சா வியாபாரி என்று அறியப்பட்ட நபரின் வீட்டின் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிய வருகின்றது.

அத்துடன், அங்கு நிறுத்தப்பட்டிருந்த லொறிகள் மீது பெற்றோல் குண்டு தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை - மித்தெனிய பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திலிருந்து வெற்று துப்பாக்கி தோட்டாக்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் வீட்டில் இருந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கோடரியால் கொத்தப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டார்!

கொழும்பு, ஏப். 15

இருவரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் ஒருவர் கோடரியால் கொத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

காலி - ஹங்கம பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த நபரை கொலை சந்தேகநபர் முன்னரும் தாக்கியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த அவர் கராப்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

இந்த நிலையில், அவர் வீடு திரும்பிய நிலையில் அவரைத் தாக்கிய நபர் கோடரியுடன் வீட்டுக்கு வந்து அவரை கொத்திக் கொன்றார் என்று கூறப்படுகின்றது.

சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# கொக்கைனை வயிற்றுக்குள் கடத்திய பெண் கைதானார்!

கொழும்பு, ஏப். 15

சுமார் மூன்றரை கோடி ரூபாய் பெறுமதியான கொக்கைன் போதைப்பொருள் அடங்கிய பொதிகளை விழுங்கி - வயிற்றில் கடத்திய வெளிநாட்டு பெண்கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கடந்த 12 ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார். மடகஸ்கரைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருளின் பெறுமதி சுமார் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்தது.

குறித்த பெண் எத்தியோப்பியாவில் இருந்து இந்தியாவுக்கு வந்து இந்தியாவின் மும்பையில் இருந்து இலங்கையின் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்துள்ளார்.

கைதான பெண் நீர்கொழும்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து அவரின் வயிற்றிலிருந்த போதைப் பொருட்கள் வெளியே எடுக்கப்பட்டன.

கட்டுநாயக்கா பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக அந்தப் பெண் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு



புத்தாண்டில் பெரும் சோகம்

# சுற்றுலா சென்ற வான் விபத்து; நுவரெலியாவில் நால்வர் பலி!





புஸ்ஸலாவ, ஏப். 15

**புத்தாண்டு தினத்தன்று சுற்றுலா சென்ற நால்வர் விபத்தில் சிக்கி உயிரிழந்தமை நுவரெலியாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

இறம்பொடை - கொழும்பு பிரதான வீதியில் எல்பொடைக்கும் புஸ்ஸலாவைக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று மாலை வான் ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் நால்வர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் விபத்துக்குள்ளான வான் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு பத்து பேருடன் சுற்றுலாவுக்கு வருகைதந்து பின் கொழும்பை நோக்கிப் பயணிக்கையில் விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், விபத்துக்குள்ளான வானில் சிறு குழந்தைகளும் வயோதிபர்களும் இருந்தனர் என்றும் கூறப்பட்டது.

அதேநேரம் விபத்துக்குள்ளான வானில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் பிரதேச மக்கள், பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். (எ)

# தமிழ் அரசு கட்சியின் புதுவருட கொண்டாட்டம்!




வடமராட்சி, ஏப். 15

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பருத்தித்துறை தொகுதியில் புதுவருட தினமான நேற்று கைவிசேசம் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

மந்திகை மடத்தடியிலுள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் தொகுதி பணிமனையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன் இந்த நிகழ்வில் பங்கேற்று கைவிசேசம் வழங்கினார். (ஐ -02)



# புத்தாண்டு நிகழ்ச்சியில் ஜனாதிபதி பங்கேற்றார்!

நுவரெலியா, ஏப். 15

நுவரெலியா - மீபிலிபான “அபி யூத்” இளைஞர் அமைப்பினால் நுவரெலியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் இணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றார்.

பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கு அமைவாக நடைபெற்ற இந்நிகழ்வில், விளையாட்டு மற்றும் கலாசார அம்சங்கள் பலவும் உள்ளடக்கியிருந்தன.

புத்தாண்டு நிகழ்வு நடைபெற்ற இடத்துக்கு வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில போட்டிகளைக் கண்டுகளித்த பின்னர், அங்கு இடம்பெற்ற சைக்கிளோட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களும் பரிசுகளை வழங்கினார்.

சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை கண்டுகளிக்க வந்த பிரதேச மக்களுடன் அளவளாவியதுடன், மக்கள் முன்வைத்த பிரச்னைகளுக்கு தீர்வைத் தருவதாக உறுதி அளித்தார்.

நுவரெலியா - மீபிலிபான சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் சுற்றுலா,காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும், பிரதேச அரசியல்வாதிகள் சிலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# உமா ஓயா பல்நோக்கு திட்டம் 24ஆம் திகதி திறக்கப்படும்!

கொழும்பு, ஏப். 15

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும் எனத் திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் டி. சி. எஸ். எலகந்த தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாளாந்தம் 8 முதல் 10 கோடி ரூபாய் பெறுமதியான நீர் மின்சாரத்தை தேசிய கட்டமைப்புக்கு சேர்க்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

514 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் ஈரானிய அரசாங்கத்தின் கடனுதவியின் கீழ் 2011 ஆம் ஆண்டு உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

120 மெகாவோட் மின்சாரத் திறனை தேசியக் கட்டமைப்பில் இணைக்கும் நோக்கில் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பதுளைக்கு 65 உயர் அழுத்த மின் கம்பிகள் ஊடாக 23 கிலோமீற்றர் தூரம் கடத்தப்பட்டு தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளது.

அத்துடன், உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் குடிதண்ணீருக்கான நீரைப் பெற்றுக் கொள்வது இதன் நோக்கமாகும்.

இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், நீர்மின் உற்பத்திக்கான சோதனை நிலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திட்ட பணிப்பாளர் பொறியிலாளர் டி.சி.எஸ். எலகந்த தெரிவித்துள்ளார். (ஐ)

# இஸ்ரேல் சென்ற இலங்கையர்கள் டுபாயில் நிர்க்கதி நிலையில்!

கொழும்பு, ஏப். 15

இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு சென்ற இலங்கையர்கள் குழு ஒன்று டுபாயில் நிர்க்கதி நிலையில் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் - இஸ்ரேல் மோதலால் மத்திய கிழக்கில் பதற்றம் நிலவுகிறது. அத்துடன், விமான சேவைகளும் இரத்தாகியுள்ளன.

இந்த நிலையில் பிளை டுபாய் விமானம் ஒன்றில், இஸ்ரேலின் டெல் அவிவ் நோக்கிச் சென்ற இலங்கையர் குழு டுபாயில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளது.

இஸ்ரேல் எல்லைக்குள் ஈரான் வான்வழித் தாக்குதல் நடத்தியதாக கிடைத்த தகவலையடுத்து, சில இலங்கையர்களுடன் விமானம் டுபாய்க்கு திருப்பி விடப்பட்டதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்!

சிலாபம், ஏப். 15

வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

புத்தளம் - மஹகும்புக்கடவல , ஹோம்ப கஸ்வெவ பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 56 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

மின்னல் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்தார். (ஐ)

# 726 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஏப். 15

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்தமை உள்ளிட்ட தவறுகள் தொடர்பில் இவ்வாறு வழக்கு தொடரவுள்ளதாக அதிகார சபையின் விசேட விசாரணை பணிப்பாளர் சஞ்ஜய இரசிங்க தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# புத்தாண்டு பாடல் திரிபு; விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 15

தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வரும் புத்தாண்டு பாடல் திரிபுபடுத்தப்பட்டிருப்பது குறித்து கலாசார அலுவல்கள் அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் ஆலோசனையின் பேரில் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ரோஹண பெத்தகே பாடிய புத்தாண்டு பாடலே இவ்வாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, குறித்த பாடலை திரிபுபடுத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# நீர்தாங்கி விழுந்து 4 வயது சிறுமி பலி!

கொழும்பு, ஏப். 15

நீர்த்தாங்கி கவிழ்ந்து விழுந்ததில் குளியல் அறையில் குளித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - அரலகங்வில ருஹுனுகம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 4 வயது சிறுமியே உயிரிழந்தார். (ஐ)

# குரோதி புத்தாண்டை பக்திபூர்வமாக வரவேற்றனர் மட்டக்களப்பு மக்கள்!

மட்டக்களப்பு, ஏப். 15

**குரோதி புதுவருடத்தை ஆலயங்களில் வழிபாடாற்றி வரவேற்றனர் மட்டக்களப்பு மாவட்ட மக்கள்.**

**நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் புத்தாண்டு பிறந்தது. தமிழ் - சிங்கள மக்கள் நாடு முழுவதும் நேற்று கொண்டாடினர்.**

நேற்று முன்தினம் இரவு புத்தாண்டு பிறப்பை ஒட்டி கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

சுபவேளையில் மாமாங்கேஸ்வரருக்கு மருத்துநீர் வைக்கப்பட்டு விசேட அபிசேகம் நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து மாமாங்கேஸ்வரருக்கு விசேட பூசைகள் நடைபெற்றன.

ஆலயத்தின் பிரதகுரு சிவசிறீ பூரண சுதாகர குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த வழிபாடுகளின்போது நாட்டில் துன்பம் நீங்கள் நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ விசேட பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஆலயத்தில் சித்திரைப்புத்தாண்டை குறிக்கும் வகையில் கைவிசேடமும் ஆலய நிர்வாகத்தால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதையல் தோண்டிய 13 பேர் கைதாகினர்!

திருகோணமலை, ஏப். 15

புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 13 பேரை கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் ரத்னபுர, கேகாலை மற்றும் தெவனிபிய வர பகுதிகளில் வசித்து வரும் 21 வயதுக்கும் 52 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கைதான 13 பேரில் நான்கு பேர் மொரவெவ பொலிஸ் பிரிவில் வசித்து வருபவர்கள் எனவும் பெண்ணொருவர் அடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இயங்கிக்கொண்டிருந்த ராட்டினம் உடைந்ததில் சிறுவன் படுகாயம்!



வாழைச்சேனை, ஏப். 15

ஓட்டமாவடி சிறுவர் பூங்காவில் சுழலும் ராட்டினம் உடைந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. ஓட்டமாவடி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் சிறுவர் பூங்காவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுழலும் ராட்டினத்தில் சிறுவர்கள் ஏறி அமர்ந்திருந்த நிலையில் ராட்டினத்தை இயக்குநர் இயக்கியுள்ளார். அந்த சமயம் ராட்டினம் உடைந்து சிறுவன் தூக்கி வீசப்பட்டார்.

இதில், 15 வயதான சிறுவன் படுகாயமடைந்து வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# காத்தான்குடி சிறுவர் இல்லத்துக்கு ஜனாதிபதியின் பரிசுப் பொதிகள்!

மட்டக்களப்பு, ஏப். 15

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு காத்தான்குடி சிறுவர் இல்லத்துக்கு ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இனிப்பு பண்டங்கள் பரிசுப் பொதிகள் என்பன நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நாடாளவிய ரீதியில் இருக்கும் சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களுக்கு இனிப்பு பண்டங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் காத்தான்குடி சிறுவர் இல்லத்துக்கும் இந்தப் பரிசுப் பொருட்கள் இனிப்பு பண்டங்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு குருக்கள்மடம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் அமில டயஸ் காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சிறுவர் இல்ல மாணவர்களுக்கான இனிப்பு பண்டங்கள் பரிசுப் பொதிகளை காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் ஐ.எல்.எம்.ருபைத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகள் காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சிறுவர் இல்ல மாணவர்கள் அதன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாடாளாவிய ரீதியில் இருக்கும் 335 சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் பராமரிக்கப்படும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான பிள்ளைகளுக்கு ஜனாதிபதியின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியுடன் இனிப்பு பண்டங்களும் பரிசுப் பொருட்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊர்மனைக்குள் புகும் முதலைகள் அவதானத்துடன் செயல்படுங்கள்!

## மட்டு. மாநகர மக்களுக்கு அறிவுறுத்து

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான வெயிலுடனான காலநிலை நீங்கி மழை பெய்துவரும் நிலையில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி முதலைகள் வரும் சாத்தியம் இருப்பதால் மக்களை அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட மக்கள் செறிந்து வாழும் கூழாவடி பகுதிக்குள் நுழைந்த முதலை ஒன்று மக்களால் பிடிக்கப்பட்டது.

இந்தப் பகுதிக்குள் நீர்நிலைகள் இல்லாதபோதிலும் முதலை நுழைந்ததையடுத்து அங்கு பதற்றநிலை காணப்பட்டது.

முதலையை பிடித்த மக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, அந்த முதலை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டது.

தற்போது மழையுடனான காலநிலை நிலவும் நிலையில் முதலைகளின் நடமாட்டம் தொடர்பில் அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொம்புசந்தி பிள்ளையார் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு!

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு- தேற்றாத்தீவு - கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதற்கான கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை செட்டிபாளையம் சிறீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

ஆலயத்தின் தேரோட்டமானது தேர்த்திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)



# மட்டு. சிறையிலிருந்து 16 கைதிகள் விடுதலை

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து நேற்று முன்தினம் 16 கைதிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலையாகினர்.

சிறிய குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்கேற்பில் கைதிகளை விடுதலை செய்யப்பட்டனர். (ஐ)

மத்திய கிழக்கில் போர் சூழல் மேலும் உயர்வு

# இஸ்ரேல்மீது தாக்குதலை நேற்று ஆரம்பித்தது ஈரான்!



ஜெருசலேம், ஏப். 15

**இஸ்ரேல் மீது நேரடி தாக்குதலை ஈரான் ஆரம்பித்துள்ளது. இஸ்ரேலை நோக்கி 200இற்கும் மேற்பட்ட ஆளில்லா தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகனைகளை ஈரான் ஏவியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

சமீபத்தில் சிரியாவின் டமாஸ்கஸில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில், அங்குள்ள ஈரான் தூதரகம் கடும் சேதமடைந்தது. இரண்டு தூதரக அதிகாரிகளும், ஈரான் இராணுவத்தின் முக்கிய தளபதிகள் உள்ளிட்ட 7 பேரும் கொல்லப்பட்டனர். இதனால் ஈரான் கடுங்கோபமடைந்தது.

இந்தத் தாக்குதலையடுத்து எந்நேரமும் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தலாம் என்றபதற்றம் நிலவி வந்தது. இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தலாம் என்ற நிலை நீடித்தது. இதனால், ஈரான், இஸ்ரேலுக்கு சுற்றுப் பயணம் செல்வதைத் தவிர்க்குமாறு உலக நாடுகள் தங்கள் மக்களை கேட்டுக் கொண்டன.

இந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை (உள்ளூர் நேரம் 1.45 மணியளவில்) இஸ்ரேல்மீது நேரடி தாக்குதலை ஈரான் தொடங்கியது.

ஏவப்பட்ட ஏவுகணைகளில் பலவற்றை வானிலேயே அழிக்கப்பட்டன என்றும் ஆளில்லா விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

இதேநேரம், இஸ்ரேல் நோக்கி சென்ற ஆளில்லா விமானங்கள் சிலவற்றை அமெரிக்காவும் சுட்டு வீழ்த்தியதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

எனினும், சில ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் இலக்குகளை தாக்கியுள்ளன என்று கூறப்படுகின்றது. இவ்வாறான தாக்குதல் ஒன்றில் தெற்கு இஸ்ரேலில் தளம் ஒன்று சேதமடைந்ததாக கூறப்பட்டது. எனினும், அது தொடர்பான மேலதிக விவரங்களை இஸ்ரேல் வெளியிடவில்லை.

அத்துடன், 7 வயது சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈரானின் இந்த தாக்குதலுக்கு இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஐ)

# சிட்னியில் கத்திக்குத்து; 6 பேர் உயிரிழந்தனர்!



சிட்னி, ஏப். 15

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வணிக வளாகத்தில் நடத்தப்பட்ட கத்திக்குத்து தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் நடைபெற்றது. சம்பவம் தொடர்பில் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் தாக்குதலை நடத்தியவரை சுட்டுக் கொன்றனர்.

இந்தக் கத்திக்குத்து தாக்குதலை நடத்தியது யார்? தாக்குதலுக்கான காரணம் என்ன? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# பதற்றத்தை தணிக்கவே அமெரிக்கா விரும்புகிறது

வாஷிங்டன், ஏப். 15

ஈரானிய தாக்குதலுக்கு தாக்குதலின் அளவு, பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் வகைகள் மற்றும் உயிர் சேதங்களை பொறுத்தே அமெரிக்கா பதிலளிக்கும். எது எப்படி இருப்பினும் இந்தப் போர் பதற்றத்தை தணிக்கவே விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்மீது ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவி ஈரான் நேற்று போரை ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் தொலைபேசி மூலம் உரையாடியிருந்தனர்.

இந்த உரையாடலின்போது தாக்குதலின் அளவுக்கு ஏற்ப பதிலடி வழங்குவது குறித்து இருவரும் பேசினர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# அனைத்து தரப்பினரும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடியுங்கள்!

**ஐ. நா. பொதுச் செயலர் அழைப்பு**

நியூயோர்க், ஏப். 15

மத்திய கிழக்கில் பல முனைகளில் பெரிய இராணுவ மோதலுக்கு வழிவகுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் தவிர்க்கப்பட வேண்டும். அனைத்து தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டை - நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் ஆரம்பித்த போரை நிறுத்துமாறு வலியுறுத்தியே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், " பிராந்திய அளவிலான பேரழிவு அதிகரிப்பின் உண்மையான ஆபத்து. இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலை



நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். இந்தப் போரை உடனடியாக நிறுத்துமாறு அழைப்பு விடுக்கிறேன்.

"பிராந்தியமோ அல்லது உலகமோ மற்றொரு போரைத் தாங்க முடியாது என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# இந்து மத வெறுப்புக்கு எதிராக அமெ. பாராளுமன்றில் பிரேரணை

நியூயோர்க், ஏப். 15

அமெரிக்காவில் இந்து மத வெறுப்பு நடவடிக்கைகள், கோயில்கள் மீதான தாக்குதல்களை கண்டித்து அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

அங்குள்ள, இந்திய வம்சாவளி பாராளுமன்ற உறுப்பினரான தானேதர் இதற்கான பிரேரணையை அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் புதன்கிழமை அறிமுகம் செய்தார்.

அந்த பிரேரணை அவையின் மேற்பார்வை மற்றும் பொறுப்பேற்புக்கான குழுவின் ஆய்வுக்கு அமெரிக்க பாராளுமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

அமெரிக்காவில் பல்வேறு நாடுகளிலிருந்தும் குடியேறிய 40 இலட்சத்துக்கும் அதிகமான இந்துக்கள் வசிக்கின்றனர். அமெரிக்க பொருளாதார வளர்ச்சிக்கு இங்கு வாழும் இந்துக்கள் நேர்மறையான பங்களிப்புகளை அளித்துள்ளபோதும், தொடர் வெறுப்புணர்வு மற்றும் தாக்குதல்களுக்கு ஆளாகி வருகின்றனர். ஹிந்துக்களின் பாரம்பரியம், வழிபாட்டு குறியீடுகள் குறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. பள்ளி, கல்லூரிகளில் இந்து மாணவர்கள் பாகுபாடு, வெறுப்பு பேச்சுகள் மற்றும் இனவாத குற்றங்களுக்கு தொடர்ந்து ஆளாகும் நிலை உருவாகி வருகிறது.

எவ். பி. ஐ. புலனாய்வு அமைப்பின் வெறுப்பு குற்றங்கள் தொடர்பான புள்ளிவிவர அறிக்கையின்படி, அமெரிக்காவில் இந்து கோயில்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் இந்துக்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட இந்து எதிர்ப்பு வெறுப்பு குற்றங்களின் எண்ணிக்கை துரதிர்ஷ்டவசமாக ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தின் கீழ் அனைவருக்கும் சமமான பாதுகாப்பை உறுதி செய்ய பாதுகாப்பு அமைப்புகள் உரிய பாரபட்சமற்ற நடவடிக்கையை மேற்கொள்கிறதா? இந்துக்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வெறுப்புணர்வு குற்றங்களைத் தடுக்க நீதித் துறையின் திட்டம் என்ன என்பதை விளக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# இஸ்ரேல் - ஈரான் மோதலால் உலகப்போர் ஏற்படும் அபாயம்!

**டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை**

வாஷிங்டன், ஏப். 15

இஸ்ரேல் - ஈரான் மோதல் விவகாரத்தால் உலகப்போர் ஏற்படும் அபாயம் உள்ளது என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையில்,

அமெரிக்காவுக்கு இது மிகவும் ஆபத்தான காலகட்டம். அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ளது. இதற்கு முன்பாக - அதுவும் குறிப்பாக தற்போது உள்ள திறமையற்ற தலைவர்களின் ஆட்சியில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் - என்றும் அவர் கூறினார். (ஐ)



# கார் மரத்துடன் மோதி விபத்து; பெண்கள் இருவர் உயிரிழப்பு!

## புத்தாண்டு தினத்தில் சோகம்

கொழும்பு, ஏப். 15

**புத்தாண்டை தமது குடும்பத்தினருடன் களிக்கும் நோக்கில் கொழும்பிலிருந்து பதுளைக்கு பயணித்த கார் விபத்துக்கு உள்ளானது. இதில், இருவர் உயிரிழந்தனர்.**

ஹலியால சிறீ வீர சக்தி விநாயகர் ஆலயம் அருகே கார் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், 51 மற்றும் 62 வயதுடைய இரண்டு பெண்களே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், புத்தாண்டை குடும்பத்தினருடன் களிப்பதற்காக கொழும்பில் இருந்து சொந்த ஊரான பதுளைக்கு காரில் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது.

ஹலியாலா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மதுபோதை சாரதிகளை கைது செய்ய நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 15

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை நேற்று முன்தினமும் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டது.

வீதித் தடைகளைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சித்திரை புத்தாண்டு காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்துவதால் ஏற்படும் விபத்துகளை தவிர்ப்பதற்கான இந்த விசேட நடவடிக்கை முன்னெ




டுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலத்தில் பேருந்துகளின் மூலம் ஏற்படும் விபத்துக்களை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# ரூ. 7,800 கோடி மதிப்புள்ள திறைசேரி உண்டியல்கள் விற்கப்படவுள்ளன!

கொழும்பு, ஏப். 15

7 ஆயிரத்து 800 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை மறுதினம் புதன்கிழமை ஏல விற்பனை மூலம் விற்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளன. (ஐ)

# துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்!

கொழும்பு, ஏப். 15

விலங்கு வேட்டைக்காக வைத்திருந்த உள்நாட்டு துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் - மதுராகொட - அந்தபொல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

51 வயதான தொடம்கஸ்லந்த பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விலங்கை வேட்டையாடுவதற்காக துப்பாக்கியை இயக்க முற்பட்டபோது துப்பாக்கி வெடித்ததில் அவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் ரிதிகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (ஐ)

# மலர்ந்த குரோதி புத்தாண்டை பக்தியுடன் வரவேற்றது மலையகம்!

ஹற்றன், ஏப். 15

குரோதி வருடப் பிறப்பை மலையக வாழ் மக்கள் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளுடன் வரவேற்றனர்.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு குரோதி வருடம் மலர்ந்தது. இந்த நேரத்தில் ஆலயங்களில் வழிபாடாற்றி மக்கள் புதுவருடத்தை வரவேற்றனர்.

தொடர்ந்து, நேற்று காலை புதுவருட விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

நுவரெலியா - ஹற்றன் சிறீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் விசேட பூஜை வழிபாடுகள்



ஆலய பிரதம குரு பிரம சிறீ சந்திரானந்த சர்மா தலைமையில் இடம்பெற்றது.

இதில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு நலம் வேண்டி விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன். பக்தர்கள் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# கடலில் கைதான 10 பேரும் போதை தடுப்பு பிரிவிடம்!



கொழும்பு, ஏப். 15

கடலில் 200 கிலோ ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கடற்படையால் கைது செய்யப்பட்ட 10 பேரும் பொலிஸின் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தெற்கு கடலில் இருந்து 130 கி. மீற்றர் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் கைதான இவர்கள் நேற்று முன்தினம் இரவு காலி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டனர்.

இரு படகுகளில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் மதிப்பு சுமார் 250 கோடி ரூபாய் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன்போது, 10 இலங்கையர்களும் கைது செய்யப்பட்டனர்.

கரைக்குக் கொண்டுவரப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் விசாரணைக்காகவும் சட்ட நடவடிக்கைக்காகவும் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

# அன்னை பூபதியின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி நல்லூரில் ஆரம்பம்







யாழ்ப்பாணம், ஏப். 15

அன்னை பூபதியின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவு முற்றத்திலிருந்து தனது பயணத்தை நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த ஊர்திப்பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ)



# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 150 ஸ்மார்ட் கழிவறைகள் அமையும்!

## உதவுகின்றது ஜப்பான்

கொழும்பு, ஏப். 15

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் 150 ஸ்மார்ட் கழிவறை அமைப்பை நிறுவவுள்ளதாகத் ஜப்பான் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்துக்கு 84 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான அதிநவீன ஸ்கானர் இயந்திரங்களை ஜப்பான் அரசாங்கம் வழங்கியது.

இதனைத் தொடர்ந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் 150 ஸ்மார்ட் கழிவறை அமைப்பு நிறுவவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, உயர் தொழில்நுட்ப உபகரணங்களை ஜப்பான் அரசாங்கம் வழங்கவுள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்காக ஜப்பான் அரசாங்கம் தொடர்ச்சியாக ஆதரவளிக்கும் என்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஷூகோஷி ஹிடேஹி தெரிவித்துள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...

கூறியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் வட மாராட்சி கிளை பணிமனையில் நேற்று நடந்த புதுவருட கொண்டாட்டம் - கைவிசேசம் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்ற முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன. குமார் பொன்னம்ப லம் முதல் சிவாஜிலிங்கம் வரையானவர் கள் கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டி யிட்டுள்ளனர்.

அவர்களுக்கு தமிழ் மக்கள் அளித்த பெறுபேறுகள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆகவே, இது குறித்த தீர்மானம் எடுக்கும்போது இந்த சரித்திர பின்னணி யும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தென்னிலங்கை இனவாத சக்திகள் மீளவும் நாட்டில் இன வாதத்தை ஏற்படுத்த முயற்சி செய்யக் கூடும்." எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதேவேளை, கச்சதீவு குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

"கச்சதீவு விவகாரம் ஒரு விவகாரமே அல்ல, அதை தேர்தல் பிரச்சாரத்திற்காக இந்தியாவில் ஒரு தரப்பினர் கையில் எடுத்துள்ளனர். அது தேர்தலோடு முடிந்து விடும்" எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். (ஐ-02)

## கறுப்பு...

கல்முனை வடக்கு பிரதேச செயலகத் தின் நிர்வாகப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் சிவில் சமூகச்செயல் பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட போராட் டத்துக்கு இதுவரை எந்தவிதத் தீர்வும் கிடைக்கவில்லை.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கறுப்பு சித்திரைப் புதுவருடமாக இந்தப் பிரதேச செயலகத்துக்குள் இருக்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் முன்பாக விசேட பொங்கல் இடம்பெற்றது.

அந்த இடத்தில் ஒருவர் மருத்துநீர் தேய்த்து நீராடியதோடு இது எங்களு டைய மத கடமை, அதனால் அதை நிறை வேற்றி இருக்கிறோம். இருந்தாலும் இது எங்களுக்குக் கறுப்பு சித்திரை வருடப் பிறப்பு. அதனால் அதை நாங்கள் கொண் டாடப் போவதில்லை என்று கூறியிருந் தனர்.

அந்த இடத்துக்கு வருகை தந்திருந்த கல்முனை பொலிஸார் இந்த நிகழ்வுக ளில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த இளைஞர்களில் தாமோதரம் பிரதீவன், புஷ்பராஜ் துஷாநந்தன், அருள்ஞான மூர்த்தி டிலான்சன் ஆகிய மூவருக்கு நீதி மன்றத் தடை உத்தரவை வழங்கினர். அத் துடன் அவர்கள் போராட்டக்களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அந்த இடத் தில் கூடிய இளைஞர்கள் போக்குவரத் துக்கு எந்த இடையூறுகளும் இன்றி யாருக் கும் எந்தத் தொந்தரவுகளோ தொல்லை களோ இன்றி மோட்டார் சைக்கிள்க ளிலே கறுப்பு ஆடைகள் ஆணைகள் அணிந்தபடி கறுப்பு கொடிகளுடன் ஊர் வலத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலகத்தின் முன்பாக ஆரம் பமாகி நற்பிட்டிமுனை, சேனைக்குடி யிருப்பு, துறைவந்தியமேடு, பெரிய நீலா வணை, மருதமுனை, பாண்டிருப்பு ஊடாக கல்முனை ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சென்று அங்கி ருந்து மீண்டும் கல்முனை வடக்கு பிர தேச செயலகத்தை வந்தடைந்தனர்.

இதன்போது ஊர்வலத்தில் ஈடுபட்ட வர்கள் தமிழர் கலாசார முறைப்படி பறை இசைத்து வரவேற்கப்பட்டனர். பிரதேச செயலகத்தின் முன்பாக அழைத்துவரப் பட்டு ஆலயத்திலே பூஜை வழிபாடுக ளில் அனைவரும் ஈடுபட்டு மீண்டும் போராட்டம் தொடரப்பட்டது. (எ)

## 30 வீதத்தினர்...

வழங்கும்போது அவதானமாக இருக்கு மாறு கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறு வர் மருத்து வமனையின் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## இலங்கை கடன்...

செயல்முறையை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான பயனுள்ள கலந்து ரையாடலில் பங்கேற்கவுள்ளதாக இரா ஜாங்க அமைச்சர் கூறினார். (ஐ)

## பொது வேட்பாளர்...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழர்களின் தேசிய அபிலா சைகளை நிறைவேற்றுவதற்காக ஜனாதி பதித் தேர்தலில் பல வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தோம். ஆனால், அவர்கள் யாரும் தமிழ் மக்களின் அபிலா ஷைகளை நிறைவேற்றவில்லை. ஆதரவ ளித்த பல பேர் தோல்வியடைந்தனர்.

வெற்றி பெற்ற மைத்திரி உள்ளிட் டோர் தமிழ் மக்களின் அரசியல் தீர்வைப் பெற்றுத்தரவில்லை. இதனால் தான் நீண்ட நெடும் அனுபவத்தின் அடிப்ப டையில் பெரும்பாலானவர்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான கருத்து நிலவி வருகிறது.

தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழர்களுக்கு நீதி வேண்டும். சர்வதேச விசாரணை வேண்டும். தமிழர் களுக்கு இறையாண்மை வேண்டும் என் பதை சர்வதேச ரீதியில் ஒரு செய்தியாக சொல்ல முடியும்.- என்றார்.

இதேவேளை, கச்சதீவு தொடர்பாக கருத்து வெளியிட்ட சிறிதரன்,

இந்தியாவின் ஆளுகைக்குள் கச்சதீவு இருந்தாலும் ஒப்பந்தத்தில் கச்சதீவு இலங் கைக்குரியது. வடக்கு தமிழ் கடற்றொழி லாளர்கள் கச்சதீவில் தொழிலில் ஈடுபடு கின்றனர். தமிழ்நாட்டில் இருக்கின்ற சகோதரர்கள் ஈழத்தின் தொப்புள் கொடி உறவுகள் பாதிப்படைய விடமாட்டார் கள். தமிழ்நாட்டில் நடைபெறும் தேர் தல் பிரசாரமே இது - என்றார். (எ)

## திருக்கோணேஸ்...

தென் கையிலை ஆதீனகுரு அகத்தி யர் அடிகளார் தலைமையில் வடக்கு - கிழக்கு பகுதி சிவனடியார்கள், திருக்கோ ணேஸ்வரர் ஆலயத்தில் ஞானசம்பந்தர் அருளிய பாடல்களைப் பாடி நினை வேந்தலை செய்தனர்.

இந்த ஆண்டு முழுவதும் கோணேஸ் வரம் அழிக்கப்பட்டமை தொடர்பான நினைவு தினத்தை கோணேஸ்வரர் ஆல யம், இலங்கை பூராகவுமுள்ள சைவ அமைப்புகளை இணைத்து முன்னெடுப் பதற்கு தென் கையிலை ஆதீனகுரு அகத் தியர் அடிகளார் அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார் உரையாற்றும்போது, கோணேஸ்வரர் ஆலயம் அழிக்கப்படுவதற்கு முன்னர் அழிக்கப்பட்ட வரலாற்று செய்திகளை யும் இலங்கை மக்களின் தலைமை கோவி லாக கோணேஸ்வரம் இருந்ததையும் ஆலயம் அழிவதைத் தடுப்பதற்கு அந்தக் காலத்தில் திருகோணமலை வாழ் சைவத் தமிழர்கள் செய்த தியாகத்தையும் நினை வுகூர்ந்தார்.

இந்த நினைவேந்தல் கூட்டத்தில் கலந்துகொண்ட சிவனடியார்களின் முக்கிய தீர்மானங்களாக, கோணேஸ்வ ரர் ஆலயத்தின் வரலாறு குறித்து அருங் காட்சியகம் அமைக்க வேண்டும். நாட ளாவிய ரீதியில் கோணேஸ்வரர் ஆலயத் தின் வரலாறு கொண்டு செல்லப்பட வேண்டும். இளையோரிடையே ஓவிய - பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என பல்வேறு விதத்தில் இந்த ஆண்டு முழுவதும் நிகழ்ச்சித் திட்டங் கள் நடத்தப்பட வேண்டும் எனப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ)

# 24 மணி நேரமும் அம்புலன்ஸ் ரெடி



கொழும்பு, ஏப். 15

அவசர காலங்களில் உடனடி சேவை களை வழங்க அம்புலன்ஸ் 24 மணி நேர மும் தயார் நிலையில் இருப்பதாக சுகா தார அமைச்சின் செயலாளர் பாலித மஹீபால தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் வினைத்திறன் மற்றும் தொடர்ச்சியான சுகாதார சேவை களை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, அதிகாரிக ளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் மஹீபால தெரிவித்தார்.

பொதுவாக பண்டிகைக் காலங்களில் விபத்துகள், உணவு விசம் மற்றும் தொற் றாத நோய்கள் அதிகரித்து வருகிறது.

விபத்துக்கள், உணவு விசமான சம்ப வங்கள் மற்றும் தொற்றா நோய்கள் கார ணமாக மருத்துவமனைகளில் சேர்க்கப்ப டும் நோயாளர்களுக்கு துரித சேவைகளை வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கை ளும் எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் மஹீபால தெரிவித்தார்.

அவசர காலங்களில் உடனடி சேவை களை வழங்க நோயாளர்காவு வண்டிகள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருப் பதாகவும் அவர் கூறினார். (எ)

## இலங்கை...

9ஆவது தொடர் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் மேற்கிந்தியத்தீவுகளி லும் நடைபெறும் இந்தத் தொடருக்கான உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண இலங்கை அணிக்கு வனிந்து ஹசரங்கவை தலைவராகவும் சரித் அசலங்கவை உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வியாஸ்காந்த் தற்போது ஐ. பி. எல். தொடருக்காக இந்தியாவில் உள்ளார். அவர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக் காக உள்வாங்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விவரம் - வனிந்து ஹசரங்க (தலைவர்), சரித் அசலங்க (உதவித் தலை வர்), குசல் மெண்டிஸ், பெத்தும் நிஸ்ஸங்க, சதீர சமரவிக்ரம, அஞ்சலோ மத்யூஸ், கமிந்து மெண்டிஸ், தசுன் ஷானக்க, தனஞ்சய டி சில்வா, அவிஷ்க பெர்னாண்டோ, தினேஷ் சந்திமால், குசல் பெரேரா, பானுக்க ராஜபக்ஷ, நிரோஷன் திக்வெல்ல, துஷ்மந்த சமீர, மஹீஷ் தீக்ஷன, பினுர பெர்னாண்டோ, அசித்த பெர்னாண்டோ, லஹிரு மதுஷங்க, மதீஷ பத்திரண, நுவன் துஷார, லஹிரு குமார, டில்ஷான் மதுஷங்க, ப்ரமோத் மதுஷான், சாமிக்க கருணாரட்ன, ஜனித் லியனகே, லசித் குருஸ்புள்ளே, சஹான் ஆராச்சிகே, அகில தனஞ்சய, ஜெவ்ரி வெண்டசாய், துனித் வெல்லாலகே, விஜயகாந்த் வியாஸ் காந்த் (எ)

## வலி. மேற்கு...

சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் அவர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

அராலியை பூர்வீகமாகக் கொண்ட நடனேந்திரன், கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அர சுக் கட்சி சார்பில் போட்டியிட்டு தெரி வாகி தவிசாளரானார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் நீண்டகால உறுப்பினராகச் செயல்பட்ட நடனேந்திரன் பின்னாட்களில் தமிழ் அரசுக் கட்சியில் உறுப்பினராகி உள்ளூ ராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டி ருந்தார்.

அண்மைக் காலமாக தமிழ் அரசுக் கட்சிக்குள் நிலவி வரும் குழு நிலை மோதல் போக்கு காரணமாக அரசியலில் இருந்து ஒதுங்குவதாகக் கூறிய நடனேந் திரன், திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தி லும் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொது வேட்பாளர்...

ஆதரவு தெரிவித்துள்ளன.

நிச்சயமாக தமிழ் அரசுக் கட்சியும் பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆத ரவு வழங்க வேண்டும். இன்று அவர்கள் மத்தியில் பல பிரச்னைகள் இருந்தாலும் கட்சி பிளவுபட்டது போல தெரிந்தா லும் முக்கியத்துவம்மிக்க கட்சி தமிழ் அரசு கட்சி. அந்தக் கட்சி ஆதரவு நிலைப் பாட்டில் இணைய வேண்டும்.

இதேபோன்று க. வி. விக்னேஸ்வரன் எம். பியின் கட்சியும் இதில் சேர வேண் டும். விக்னேஸ்வரன் வேலன் சுவாமி களை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று கோரியிருந்தார். ஆனால், அவர் ஒரு மதம் சார்ந்தவர். தமிழ் மக்க ளில் வேற்று மதத்தினரும் உள்ளனர். ஆத லால், அவரை பொது வேட்பாளராக நியமிப்பது பொருத்தமல்ல.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை காங்கிரஸ் கட்சியும் இதில் இணைந்தால் நல்லது. அவர் நிச்ச யமாக இணைவதற்கு தயாராகவில்லை. இதை ஒரு நாடகம் என்ற ரீதியிலே கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் யாரையோ வெல்ல வைப்பதற்கான முயற்சி என்கிறார்.

பகிஷ்கரிப்பு என்பதுவும் யாரையோ வெல்ல வைப்பதற்கான நிகழ்ச்சி என்றே நான் பார்க்கின்றேன். பகிஷ்கரிப்பதன் மூலம் யாரோ ஒருவருக்கு வெற்றி வாய்ப்பை கொடுக்க முயற்சிக்கிறார்கள். 2005 ஜனாதிபதித் தேர்தலிலும் பகிஷ்க ரிப்பு மூலம் ஒருவரை தோற்கடித்து மற்ற வரை வெல்ல வைக்கவே முயற்சிக்கப்பட்டது.

அப்போது, ரணிலை தோற்கடித்து மகிந்தவை வெல்ல வைப்பது நல்லது என்ற அபிப்பிராயம் இருந்தது. இதனை கொள்கை ரீதியாக செயல்படுத்தினார் கள். இதேபோல, பகிஷ்கரிப்பதன் மூலம் யாரை வெல்ல வைக்க முயற்சிக்கிறார்கள் என்பதை அவர்கள் இன்னும் கூறவில்லை.

ஆனால், எம்மைப் பொறுத்தமட்டில் இது ஒரு கொள்கை ரீதியாக கடந்த காலங்களிலே ஏதோ ஒரு வகையிலே ஒரு கட்சிக்கு நாங்கள் சார்பாக இருந்தபோ தும் அந்த கட்சியால் கொடுத்த வாக்கு றுதியை முழுமையாக நிறைவேற்ற முடி யாமல் போனது - அவர்கள் ஏமாற்றிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இதனடிப்ப டையிலேதான் அனைவருமாக சேர்ந்து தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும். அந்த வேட்பாளர் ஆகக்கூ டிய தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற வேண்டும் - என்றார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu

# 930 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் சிக்கின!

கொழும்பு, ஏப். 15

**இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் கடற்படையின் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 930 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று கடற்படை தெரிவித்துள்ளது.**

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களில் ஹெரோயின், ஐஸ், கேரள கஞ்சா போன்றவை அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தெற்கு கடற்பரப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 264 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப் பொருள் நேற்று முன்தினம் இரவு காலி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதன் பெறுமதி மட்டும் 379.8 கோடி ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

## திட்டமிட்ட குற்றக் குழுவின் உறுப்பினர்கள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 15

மேல் மற்றும் தென் மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிஸ் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரண்டு பேரும் முல்லேரியா மற்றும் அங்கொடை பகுதிகளில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டனர் என்று கூறப்படும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மற்றும் தென் மாகாணத்தை மையமாகக் கொண்டு மேல் மற்றும் தென் மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப் பகுதியில் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த 412 பேர் கைது செய்யப்பட்டுள்னர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஐந்து மாகாணங்களில் மின்னல் தாக்கம் ஏற்படலாம்!

கொழும்பு, ஏப். 15

பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் 5 மாகாணங்கள் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் பரவலாக இடியுடன் கூடிய மழையுடன் கூடிய பலத்த மின்னலுக்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது அந்த பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)

# அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தமது தகுதிகளை வெளியிட வேண்டும்!

## நவீன் திஸநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 15

அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் பகிரங்க விவாதங்களில் ஈடுபட்டாலும் - இல்லாவிட்டாலும் தங்களின் வெளிப்படையான தகுதிகளை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

"அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும், தங்கள் தகுதிகளை மக்களுக்கு காட்ட வேண்டும். ஒரு அற்புதமான ஸ்திரமான மீட்சிக்குப் பிறகு இந்த நாட்டைச் சிதைக்கும் வெறும் பேச்சாளர்கள் இருக்க முடியாது,"



என்று திஸநாயக்க தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# கட்சி பிளவுபடுவதற்கு இடமளிக்க வேண்டாம்



கொழும்பு, ஏப். 15

கட்சி பிளவுபடுவதற்கு இடமளிக்க வேண்டாம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்க அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களை கேட்டுக்கொள்வதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

"சில அமைச்சர்கள், சில இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி சிந்திக்கின்றனர். எவ்வாறாயினும், இந்நேரத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய பங்களிப்பை எவராலும் மறக்க முடியாது. கட்சி பூச்சியமாக வீழ்ந்து சாம்பலாகவும் புழுதியாகவும் மாறிவிட்டது.

எனவே, கட்சி பிளவுபடுவதற்கு இடமளிக்க வேண்டாம் என்று கட்சியின் பெயரால் பாராளுமன்றத்தில் சில பதவிகள், அமைச்சுப் பதவிகள், இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்ற எமது கட்சியின் சகோதர, சகோதரிகளுக்கும், அனைத்துப் பதவி வகிப்பவர்களையும் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

# இஸ்ரேலில் இலங்கையர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்

## இலங்கை தூதரகம் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 15

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகனை தாக்குதல்களை நடத்தியுள்ள நிலையில் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

# 100 மி.மீ. வரை இன்று மழை கிடைக்கலாம்!

கொழும்பு, ஏப். 15

நாட்டின் பல பகுதிகளில் இன்று திங்கட்கிழமை 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மற்றும் ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும்

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 15

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் கடந்த 4 மாதங்களில் மட்டும் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 28 ஆகவுள்ளது.

அதிகமான டெங்கு தொற்றாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 527 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம் மேல் மாகாணத்திலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழைப் பெய்து வருகின்றது.

இந்த நிலையில், டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில் சுற்றுசூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதாரத் துறையினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 147 ஓட்டங்களுக்கு சுருண்டது பஞ்சாப் போராடி வென்றது ராஜஸ்தான் அணி



முலான்பூர், ஏப். 15

ஐ.பி.எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மூன்று விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இறுதி வரை போராடி வெற்றி பெற்றது.

முலான்பூரிலுள்ள மகாராஜா யாதவேந்திர சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ஜானி பேர்ஸ்டோ - அதர்வ தைடே களமிறங்கினர்.

27 ஓட்டங்களைச் சேர்த்த இந்த ஜோடியை 4 ஆவது ஓவரில் ஆவேஷ் கான் பிரித்தார். அதர்வ தைடே 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பிரப்சிம்ரன் சிங் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற, அந்த சோகத்திலிருந்து பஞ்சாப் அணி மீள்வதற்குள் ஜானி பேர்ஸ்டோ 15 ஓட்டங்களுக்கு தனது விக்கெட்டை பறிகொடுக்க அடுத்து வந்த சாம் கரன் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார்.

ஷசாங்க் சிங் 9 ஓட்டங்கள், ஜிதேஷ் சர்மா 29 ஓட்டங்கள் என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அஷுதோஷ் சர்மா மட்டும் பஞ்சாப் அணியில் அதிகபட்ச எண்ணிக்கையான 31 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இக்கட்டான நிலையில் அஷுதோஷ் அடித்த 3 சிக்ஸர்கள் பஞ்சாப் அணிக்குப் பெரும் நம்பிக்கையூட்டியது. இறுதியில் அவரும் ஆட்டமிழந்து வெளியேற 8 விக்கெட்டுகளை இழந்த பஞ்சாப் 147 ஓட்டங்களை மட்டும் சேர்த்தது.

148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணியில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் - தனுஷ் கோட்டியன் இருவரும் நிதானமான ஆரம்பம் வழங்கினர். இதில் ஜெய்ஸ்வால் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேற, தனுஷ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சஞ்சு சாம்சன் 18, ரியான் பராக் 23, துருவ் ஜுரேல் 6 ஓட்டங்கள் என ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழந்து வெளியேற, ஷிம்ரன் ஹெட்மயர் மூன்று சிக்ஸர்களுடன் 27 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் ஆர். ஆர். இரசிகர்களின் நம்பிக்கையை காப்பாற்றினார்.

இந்நிலையில், 19.5 ஓவர்களில் வெற்றி இலக்கை கடந்து மூன்று விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ் போராடி வென்றது.

(எ)

# உலகக் கோப்பை தான் எனது பிரதான இலக்கு

## ரோஹித் சர்மா உறுதி

டில்லி, ஏப். 15

"இந்திய அணிக்காக உலகக் கோப்பையை வென்று கொடுக்க விரும்புகின்றேன்" - இவ்வாறு இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

தனியார் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"நடப்பு ஐ.பி.எல். தொடரில் இப்போதைக்கு நான் சிறப்பாகவே விளையாடி வருகிறேன். அதனால் அடுத்த சில ஆண்டுகள் இதனைத் தொடர விரும்புகிறேன். இந்திய அணிக்காக உலகக் கோப்பை வெல்ல விரும்புகிறேன். 2025 ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. அதில் இந்திய அணி விளையாடும் என நம்புகிறேன்.

நான் 50 ஓவர் உலகக் கோப்பை தொடரைப் பார்த்து வளர்ந்தவன். எங்களுக்கு அது தான் அசல் உலகக் கோப்பை. இந்தியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் அஸ்திரேலியாவுக்கு சிறந்த நாளாக அமைந்தது. நாங்கள் மோசமான கிரிக்கெட் ஆடவில்லை. சில விடயங்கள் எங்களுக்குச் சாதகமாக அமையவில்லை. எங்களை விட அன்றைய தினம் அவர்கள் சிறந்து விளங்கினார்கள்"- என்றார் ரோஹித்.

எதிர்வரும் ரி - 20 உலகக் கோப்பை தொடரில் ரோஹித் சர்மா தலைமையில் இந்திய அணி விளையாடவுள்ளது. ரோஹித் சர்மா இந்திய அணிக்காக 472 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். டெஸ்ட், ரி - 20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் என மொத்தமாக 18 ஆயிரத்து 820 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# லக்னோ தடுமாற்றம் டில்லி மீண்டும் வெற்றி

லக்னோ, ஏப். 15

ஐ.பி.எல். ரி - 20 கிரிக்கெட் தொடரில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் டில்லி அணி வெற்றி பெற்றது.

லக்னோவிலுள்ள ஏகனா மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. குயின்டன் டி காக் - கே.எல். ராகுல் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். 3 ஆவது ஓவரை வீசிய கலீல் அகமது பந்தில் குயின்டன் டி காக் 19 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தேவ்தத் படிக்கல் 5 ஆவது ஓவரில் கலீல் அகமது வீசிய பந்தில் டி காக் ஆட்டமிழந்தது போன்று தனது விக்கெட்டை பறிகொடுத்து 3 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து களத்துக்கு வந்த மார்க்கஸ் ஸ்டாயினிஸ் 8 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுத்தார். அதே ஓவரில் நிக்கோலஸ் பூரன் டக் அவுட் ஆனது லக்னோ இரசிகர்களுக்கு அதிர்ச்சியாக அமைந்தது. மறுமுனையில் போராடிக்கொண்டிருந்த கே.எல்.ராகுலும் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 10 ஓவர் முடிவில் 5 விக்கெட்டை பறிகொடுத்த லக்னோ 80 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஆயுஷ் பதோனி - தீபக் ஹூடா இணைந்து கள நிலவரத்தை மாற்றுவார்கள் என இரசிகர்கள் எதிர்பார்க்க, தீபக் ஹூடா 10 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். ஆனால், ஆயுஷ் பதோனி பொறுப்பாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தார். குருணல் பாண்டியா 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அர்ஷத் கான் நிதானத்தைக் கடைப்பிடித்து ஆயுஷ் பதோனிக்கு துணை நிற்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்த லக்னோ 167 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்நிலையில், 168 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய டில்லி அணிக்கு பிரித்வி ஷா - டேவிட் வோர்னர் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. யாஷ் தாக்குர் வீசிய பந்தில் விக்கெட்டை பறிகொடுத்து எட்டு ஓட்டங்களுடன் வெளியேறினார் டேவிட் வோர்னர். அடுத்து, ஆறு பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களைச் சேர்த்த பிரித்வி ஷா ஆட்டமிழந்தார்.

ஜேக் ஃப்ரேசர் மெக்குர்க் ஐந்து சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் என 35 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்து அதிரடி காட்டினார். ரிஷப் பந்த் 41 ஓட்டங்கள், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 15 ஓட்டங்கள், ஷாய் ஹோப் 11 ஓட்டங்கள் என 18.1 ஓவர்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி வெற்றி பெற்றது.

(எ)

# வனிந்து ஹசரங்க, ஆடம் சாம்பா

# ஐ. பி. எல். தொடரிலிருந்து வீரர்கள் திடீரென விலகல்!

## அணி உரிமையாளர்கள் விரக்தி



டில்லி, ஏப். 15

ஐ.பி.எல் - 2024 கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு ஐ.பி.எல். மினி ஏலம் நடைபெற்றது. இதில் பல வெளிநாட்டு வீரர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்திருந்தனர்.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பல இளம் வீரர்கள் முதல் முறையாக ஐ.பி.எல். ஏலத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்தனர். இதில் பலர் ஏலத்தில் நல்ல விலைக்கு எடுக்கப்பட்டனர். சில வீரர்களை எந்த அணிகளும் வாங்கவில்லை. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சில வீரர்கள் கூட ஏலத்தில் எடுக்கப்படாமல் போனது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அதேசமயம் பேட் கம்மின்ஸ், மிட்சல் ஸ்டார்க் போன்ற வீரர்கள் அதிக விலைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஏலத்தில் குறைந்த விலையில் எடுக்கப்பட்ட சில வீரர்கள் ஐ.பி.எல் 2024 இல் விளையாடாமல் புறக்கணித்துள்ளனர். அடிப்படை விலை அல்லது மிகவும் கம்மியான விலையில் ஏலத்தில் எடுக்கப்பட்டதால் ஐ.பி.எல். தொடரைப் புறக்கணித்துள்ளனர்.

கடைசி நேரத்தில் வீரர்கள் தங்கள் பெயர்களைத் திரும்பப் பெறுவது சில உரிமையாளர்களைக் கவலையடையச் செய்துள்ளது. ஏலத்தில் அவர்களை நம்பி எடுத்து, கடைசியில் அவர்கள் விளையாடாமல் போவது அணியின் ஒட்டுமொத்த திட்டமிடலைப் பாதிக்கிறது என்று ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்கள் கூறியுள்ளனர். இதேவேளை, சில வீரர்கள் காயம் காரணமாக வெளியேறியிருந்தாலும், குறைவான தொகைக்கு ஏலம் போனதால் ஐ.பி.எல். தொடரைப் புறக்கணித்த வீரர்களும் உள்ளனர்.



ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஐ.பி.எல். ஏலத்தில் அவுஸ்திரேலியா வீரர் ஆடம் சாம்பாவை 1.5 கோடி ரூபாய்க்கு எடுத்தது. கடந்த ஆண்டு ஐ.பி.எல்.- 2023 சீசனில் சாம்பா விளையாடினார். ஆனால், இந்த ஆண்டு சில தனிப்பட்ட காரணங்களால் போட்டி தொடங்குவதற்கு முன்பு ஐ.பி.எல். - 2024 இல் இருந்து விலகுகிறேன் என்று அறிவித்தார். இது பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இதேபோன்று, ஐ.பி.எல். 2024 இல் இருந்து இலங்கை ரி - 20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்க கடைசி நேரத்தில் விலகினார். சன்ரைசஸ் ஹைதராபாத் அணி அவரை 1.5 கோடிக்கு ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்தது. ஆனால், ஹசரங்கவுக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் காயம் ஏற்பட்டது. மேலும், இந்த ஆண்டு நடைபெறும் ரி - 20 உலகக் கோப்பை தொடரில் விளையாட ஐ.பி.எல். தொடரைப் புறக்கணித்துள்ளார்.

இங்கிலாந்து வீரர் ஜேசன் றோய் கடைசி நேரத்தில் ஐ.பி.எல்.தொடரிருந்து விலகுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். ஜேசன் றோய் கடந்த சீசனில் கொல்கத்தா அணியில் விளையாடினார். ஆனால், இந்த ஆண்டு அணியிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக கொல்கத்தா அணியில் பில் சால்ட் விளையாடி வருகிறார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் வீரர்களின் பணிச்சுமை மேலாண்மைக்காக சில வீரர்களை ஐ.பி.எல். விளையாட அனுமதிக்கவில்லை. ஆனால், குஸ் எட்கின் சன் ஐ.பி.எல்லில் ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போன தால் இந்த ஆண்டு அவர் விளையாடவில்லை. அதேசமயம் 18.5 கோடி ரூபாய்க்கு எடுக்கப்பட்ட சாம் குர்ரன் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். (எ)

# இஸ்ரேல் -ஈரான் படைவலு சமநிலை! காசாவில் படைகள் வாபஸ் சாத்தியமா?

**இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள இந்நிலையில், ஈரான் - இஸ்ரேல், படை வல்லமை குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை.**

ஐங்கரன் விக்கினேஸ்வரா



மத்திய கிழக்குப் பகுதிகளில் காட்சிகள் பாரியளவில் மாறி வருகிறது. காசாவை இஸ்ரேல் முற்றுகையிட்டு இருந்தது. ஆனால், ஈரான் எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தலாம் என்பதால் இஸ்ரேல் காசாவின் கான் யூனிஸ் நகரிலிருந்து தங்கள் படைகளை வாபஸ் பெற்று வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

**ஈரானின் படைபலம் :**

ஈரான் விமானப் படையின் பலம் குறைவாக இருந்தாலும், ஈரானின் ஏவுகணை பலம் அதன் இராணுவ பலத்தின் முக்கிய அம்சமாக உள்ளது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிக அளவிலான ஏவுகணைகளை ஈரான் வைத்திருக்கிறது என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன் மற்றும் நடுத்தர தொலைவுக்குச் சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகள் அதிகமாக உள்ளன. ஏவுகணைகள் இன்னும் வேகமாக பயணிப்பதற்காக, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தயாரிக்கும் நோக்கில் தங்கள் விண்வெளி தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் ஈரான் முயற்சி மேற்கொண்டுள்ளது.

ஈரான் இராணுவத்தில் பல்வேறு நிலைகளில் 523,000 வீரர்கள் இருப்பதாக பிரிட்டனைச் சேர்ந்த சர்வதேச இராணுவ ஆய்வுகள் நிலையம் கூறியுள்ளது. இதில் வழக்கமான இராணுவப் பணியில் உள்ள 350,000பேரும், இஸ்லாமிய புரட்சிப் பாதுகாப்புப் படைப் பிரிவுகளில் (ஐ.ஆர்.ஜி.சி) உள்ள 150,000பேரும் அடங்குவர்.

**இஸ்லாமிய புரட்சிப் படை:**

ஐ.ஆர்.ஜி.சியின் கடற்படைப் பிரிவுகளில் 20,000 பேர் உள்ளனர். ஹோர்முஸ் நீரிணை பகுதியில் ஆயுதம் ஏந்திய கண்காணிப்புப் படகுகளை இந்தக் குழு இயக்கி வருகிறது. உள்நாட்டு புரட்சியை ஒடுக்குவதற்கு உதவிய தன்னார்வலர் படைப் பிரிவான பாசிஜ் பிரிவையும் ஐ.ஆர்.ஜி.சி கட்டுப்படுத்துகிறது.

இந்த படைப் பிரிவு பல நூறாயிரம் பேரை திரட்டும் திறன் கொண்டது. ஈரானில் இஸ்லாமிய அமைப்பு முறையைப் பாதுகாப்பதற்காக 40 ஆண்டுகளுக்கு முன்பு ஐ.ஆர்.ஜி.சி உருவாக்கப்பட்டது. அப்போதிருந்து முக்கியமான இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக அது செயல்பட்டு வருகிறது.

வழக்கமான இராணுவத்தை விட இதில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை குறைவுதான் என்றாலும், ஈரானில் வலிமையான இராணுவ படைப் பிரிவாக இது கருதப்படுகிறது.

அமெரிக்காவால் கொல்லப்பட்ட ஜெனரல் காசெம் சுலைமானி தலைமையில் செயல்பட்டு வந்த “குட்ஸ்“ படைப் பிரிவு, வெளிநாடுகளில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது.

நேரடியாக ஈரான் ஜனாதிபதி அயதுல்லா அலி காமேனியுடன் தொடர்பில் உள்ள பிரிவு அது. அதில் 5,000 பேர் இருப்பதாக நம்பப்படுகிறது. அந்தப் பிரிவு தற்போது சிரியாவில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**இஸ்ரேல் உலகின் சக்திவாய்ந்த ராணுவம்:**

உலகின் மிக சக்திவாய்ந்த இருபது இராணுவங்களில் ஒன்றான இஸ்ரேலின் மொத்த ராணுவ பலம் தொடர்பில் பல முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன. இஸ்ரேலிடம் 601 அதி நவீன ராணுவ விமானங்களும் தாக்குதலுக்கு பயன்படுத்தும் வகையில் 48 ஹெலிகொப்டர்களும் 2,200 ராணுவ டாங்கிகளும் உள்ளன. 300 பலமுனை ராக்கெட் வீச்சு அமைப்புகள் உட்பட 1,200 பீரங்கிகளும் இஸ்ரேல் ராணுவத்திடம் உள்ளன.



7 ராணுவ கப்பல்களும் 6 நீர்மூழ்கி கப்பல்களும் உள்ளன. மொசாட் உட்பட உலகின் மிகவும் திறன்மிக்க உளவுத்துறை அமைப்பை இஸ்ரேல் கொண்டுள்ளது. ராணுவத்திற்காக 2022ல் மொத்தம் 23.4 பில்லியன் டொலர்களை இஸ்ரேல் செலவிட்டுள்ளது.

ஆனால் 2021ல் செலவிட்டுள்ள தொகையில் இருந்து இது 4.2 சதவீதம் குறைவு என்றே கூறப்படுகிறது.

அத்துடன் அமெரிக்காவிடம் இருந்து ஆண்டுக்கு 3 பில்லியன் டொலர் நிதியுதவியை இஸ்ரேல் பெற்று வருகிறது. 2016ல் அமெரிக்க 10 ஆண்டுகளுக்கான சுமார் 38 பில்லியன் டொலர் ஆயுத ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இதில் 5 பில்லியன் டொலர் தொகைக்கு ஏவுகணை வாங்க பயன்படுத்தப்படும் என்றே கூறப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் ராணுவ உதவிக்கென சுமார் 58 பில்லியன் டொலர் தொகையை அமெரிக்கா இஸ்ரேலுக்கு அளித்துள்ளது.


**இஸ்ரேல் படை உருவாக்கம்:**

இரண்டாம் உலகப்போரின் பின்னர், 26 மே 1948ம் ஆண்டில் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் டேவிட் பென்-குரியனின் உத்தரவின்படி, ஹகானா துணை இராணுவப் படை குழுவிலிருந்து படைக்கு கட்டாய ஆட்சேர்க்கும் இராணுவமாக போராளிக் குழுக்களான இர்குன், லெகி என்பவற்றை உள்வாங்கி உத்தியோகபூர்வமாக இஸ்ரேல பாதுகாப்புப் படைகள் உருவாக்கப்பட்டன.

இஸ்ரேல இராணுவத்தின் குறிப்பிடத்தக்க இராணுவ நடவடிக்கைகளாக இஸ்ரேல் விடுதலைப் போர் 1948 - 1949இலும் பழிக்குப்பழிப் படை நடவடிக்கைகள் 1950 - 1960இலும் நிகழ்ந்தன. 1956 சூயெஷ் நெருக்கடி, அதன்பின்னர் 1967இல் ஆறு நாள் போர், தேய்வழிவுப் போர் 1967 - 1970இலும், யோம் கிப்பூர்ப் போர் 1973 இலும் நிகழ்ந்தன.

1978உல் தென் லெபனான் போர், அதன்பின் முதலாவது லெபனான் போர் 1982இலும், மீண்டும் தென் லெபனான் போர் 1982 - 2000, அதன்பின்னர் முதல் தடுப்பெழுச்சிப் போராட்டம் (1987 - 1993), இரண்டாம் தடுப்பெழுச்சிப் போராட்டம் (2000 - 2005), இரண்டாவது லெபனான் போர் (2006), காசா போர் (2008 - 2009) ஆகிய போர்களில் இஸ்ரேலிய இராணுவம் பங்கேற்றது.

குறுகிய காலத்தில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் ஈடுபட்ட போர்களின் எண்ணிக்கை, எல்லை முரண்பாடுகள் என்பன அவற்றை உலகிலுள்ள அதிக சமர் பயிற்சியுள்ள, அனுபவம் பெற்ற இராணுவங்களில் ஒன்றாக்கியுள்ளது. அதேவேளை அவை மூன்று முன்நிலைகளில் இயங்குகின்றன.




வடக்கில் லெபனானுக்கும் சிரியாவுக்கு எதிராகவும், கிழக்கில் யோர்தானுக்கும் ஈராக்கிற்கும் எதிராகவும், தெற்கில் எகிப்துக்கு எதிராகவும் ஆகும். 1979இல் எகிப்து-இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தின் பின், அவை கவனத்தை தென் லெபனான் மற்றும் பாலஸ்தீன நிலப்பகுதிக்கு திருப்பியுள்ளன.

**இஸ்ரேல் படை வாபஸ்:**

இஸ்ரேல் காசாவின் கான் யூனிஸ் நகரிலிருந்து தங்கள் படைகளை வாபஸ் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளது. ஆனால், இஸ்ரேல் இதற்கு வேறு ஒரு விளக்கத்தைக் கொடுத்துள்ளது. அதாவது ஹமாஸுக்கு எதிரான போர் ஆறு மாதத்தை எட்டியதால் அங்கு தனது திட்டத்தை முடித்துவிட்டே திரும்புவதாக தெரிவித்துள்ளது.

குறிப்பிடத் தகுந்த அளவுக்கு வீரர்கள் வெளியேறினாலும் கூட, மீதமுள்ள வீரர்கள் அங்கேயே இருந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளைக் கவனிப்பார்கள் என்றே இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் வேறு ஒரு விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

அதாவது காசாவின் தெற்கே எகிப்தின் எல்லையில் உள்ள ரஃபா நகரத்தின் மீது தாக்குதலுக்குத் தயாராகும் வகையிலேயே ராணுவ வீரர்களைத் திரும்பப் பெறுவதாக அவர் கூறியுள்ளார். இன்னமும் பல ஆயிரம் ஹமாஸ் படை இருப்பதால் எகிப்து அருகே உள்ள நகரமான ரஃபா மீது தாக்குதல் நடத்தப் போவதாக இஸ்ரேல் பல வாரங்களாகக் கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் ரஃபே நகரில் பத்து இலட்சத்திற்கும் அதிகமானோர் வசிப்பதால் அங்குத் தாக்குதல் நடத்தும் திட்டம் குறித்து இஸ்ரேல் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அமெரிக்கா உட்பட பல நாடுகள் இஸ்ரேலை வலியுறுத்தி வருகிறது. தாக்குதலை ஆரம்பிக்கும் முன்பு அங்குள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற முடியுமா என்பதில் சந்தேகம் உள்ளது.

# கார் ஓட்ட பந்தயத்தில் சாதனை புரியும் யாழ்ப்பாணத் தாத்தா பரமேஸ்வரன்!

என்.கே.துரைசிங்கம்

தொடர்ச்சியான யுத்தம் எம்மவரின் வாழ்கையை புரட்டிப்போட்டது. அந்த காயங்களிருந்து மீண்டுவரமுடியாது வலிகளில் தவித்தாலும் எம்மவர்கள் மெல்ல மெல்ல எழுந்து சாதனைகளை நிகழ்த்தி வருகிறார்கள். கலை இலக்கியம், விளையாட்டு, கல்வி என துறைகள் சார்ந்து சரித்திரம் படைத்து உள்ளார்கள். இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்த வரிசையிலே இலங்கையின் கார் பந்தய போட்டியிலே சாதனை நிகழ்த்தி வரும் க.பரமேஸ்வரன் பலரது கவனத்தை பெற்று வருகிறார்.

இரண்டாயிரம் ஆண்டில் கார் ஓட்டப்போட்டியில் பங்கெடுத்த அவர் இன்று வரையும் சாதனை நிகழ்த்தி வருகிறார். அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்ற போட்டியில் முதலாவது வீரனாக வந்து வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்து கொண்டார். இதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கட்டுக்குருந்த கார் ஓட்டப்பந்தயத்திலும் முதல் வீரனுக்குரிய வெற்றிக்கனியை தனதாக்கி கொண்டார்.

அன்று முதல் இன்று வரை 78 கார் ஓட்டப்பந்தயங்களில் முதலாவதாக தெரிவாகி ஈழத்தமிழருக்கு புகழ் சேர்த்துள்ளார்.

ஏற்கனவே இவரது சாதனைகளுக்கு மகுடம் அளிக்கும் வகையில் கிளிநொச்சி நகரில் இவரது கட் அவுட்






வைக்கப்பட்டு மாண்பேற்றப்பட்டது. இலங்கையின் பல பாகங்களிலும் சாதனை மன்னனாக திகழும் இவரை தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் கொண்டாடுகிறார்கள்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இவரது கார்பந்தய போட்டி நிகழ்வுகளில் பங்கெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர்களில் ஒரு சிலர் மட்டுமே கார் ஓட்டப்பந்தயத்தில் பங்கெடுக்கிறார்கள். இவரது உறவினரான அமரர் பாலசிங்கம் என்பவரும் இப்போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை நிகழ்த்தியவர். வருடந்தோறும் அவரது நினைவாக பாலசிங்கத்தின் வாரிசுகள் கார் ஓட்டப் பந்தயத்தை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

தமது இளமைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் சைக்கிளோட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற பரமேஸ்வரன் அந்த அனுபவத்தை துணையாக்கொண்டு கார் ஓட்டப்பந்தயங்களில் துணிவுடன் களமிறங்கினார்.

இயல்பாக அவரிடமிருக்கும் தற்துணிவு சாதனை மனிதராக்கியுள்ளது. சைக்கிளோட்டம் மூலம் யாழ். குடா வீதிகள் அனைத்தும் விரல்நுனியில் வைத்திருந்தவர். கார் ஓட்ட பந்தய மைதானங்களை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். கார் ஓட்டத்துக்கென வடிவமைக்கப்பட்ட கார் போட்டியாளருக்குரிய உடை என அனைத்தையும் தயார் செய்து களமிறங்கும் அவருடன் கட்டுக்குருந்த விளையாட்டு திடலுக்கு சென்று கார் பறக்கும் அழகை ரசித்திருக்கிறேன். வளைவுகள், பள்ளம், மேடு எந்த இடமாக இருந்தாலும் லாவகமாக கார் ஓட்டிச் செல்லும் அழகே தனி அழகு இதில் தடைகள் வந்தாலும் அதனை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றிக்கோட்டை தாண்டுவார்.

கார் ஓட்டப்பந்தயதில் களமிறங்குவது சுலபமான விடயமல்ல. உயிரைப்பணயம் வைத்துத்தான் அதில் வீரனாக முடியும். பெரும் பணச்செலவாகும். இதனால் பண பலம் உள்ளவர்களே இந்த போட்டியில் பங்கெடுப்பார்கள். பரமேஸ்வரனும் உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்துதான் இதில் கலந்து கொள்வார். அவரின் முயற்சி வெற்றியளித்துள்ளது. இலங்கையில் முதன்மையான கார் ஒட்ட வீரனாக திகழ்வதுடன் உலக தர வீரனாக உருவாகி வருகிறார்.

எந்த வாகனமாக இருந்தாலும் பரமேஸ்வரனின் விரல் தொட்டவுடனே இயங்கிவிடும். வானங்களுக்கு அவர் கை தேர்ந்த டாக்டர். ஆரம்பத்தில் வாகனம் திருத்துவதே வாழ்வாதாரமாக கொண்டவர். அதனால் எந்த சூழலிலும் காரை ஒட்டிச்செல்லும் பக்குவம் அவரிடமிருந்தது. அதுவே அவரது சாதனைகளுக்கு காரணம் என்றால் மிகையில்லை.

இலங்கையில் அனுராதபுரம், கட்டுக்குருந்த, தியத்தலவா, நுரெலியா, மாத்தறை, பன்னலை,மின்னேரியா போன்ற இடங்களில் நடைபெற்ற கார் ஓட்டப்பந்தயத்தில் முதலாமிடத்தை பெற்ற பரமேஸ்வரனின் சாதனையை எவருமே முறியடிக்கவில்லை. போட்டிகளில் 60 அல்லது 70 காரோட்ட வீரர்கள் கலந்து கொண்டாலும் பரமேஸ்வரனே வெற்றிக்கம்பத்தை தொடுவார்.

இரண்டரை கிலோ மீற்றர் தூரமுடைய பாதையை பல தடவைகள் சுற்றி அதில் முன்னேறிவரும் வீரர்களுக்கு வெற்றி கிடைக்கும். சம தரைகளில் மட்டுமல்ல மலைப் பாதைகளிலும் இப்போட்டி நடத்தப்படுகிறது. தனித்தனியாக ஒவ்வொருவரையும் ஓட வைத்து நேரக்கணிப்பெடுத்து பரிசளிப்பார்கள் இதிலும் இவர் சிகரத்தை தொட்டுள்ளார்.

தமிழ் சூழலில் பிறி.பொன்னம்பலம், க.பாலசிங்கம் ஆகிய ஒரு சிலரே கலந்து கொண்டனர். அதிகமாக சிங்கள வீரர்களே பங்கெடுக்கிறார்கள் தற்போது தனி ஒருவராக பரமேஸ்மட்டும் பங்குபற்றுகிறார்.

“கிரிக்கெட், உதைபந்தாட்டம், றகர் உட்பட பல விளையாட்டுகளுக்கு ஆதரவு இருப்பது போல கார் ஓட்டப்பந்தயம் கண்டு கொள்ளப்படவில்லை. உலகம் முழுவதுமே பிரபல்யமிக்க கார்ப்பந்தாய போட்டியில் நம்மவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்” என்று அவர் ஆதங்கப்பட்டார்.

அறுபது வயது தாத்தா நிலையில் இருந்தாலும் கார் ஓட்ட போட்டி உணர்வால் மார்க்கண்டேயராக திகழ்கிறார். ●

# இஸ்ரேல் மீது ஈரான் திடீர் ஏவுகணை தாக்குதல்: அமெரிக்கா, பிரிட்டன் கண்டனம்!

ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் மீது ஈரான் பெரிய அளவிலான தாக்குதலை நடத்தியுள்ளது. சிரியாவில் உள்ள அதன் தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தேரஸ், “பிராந்திய அளவிலான பேரழிவு அதிகரிப்பின் ஆபத்து குறித்து ஆழ்ந்த கவலையுடன்” இருப்பதாகக் கூறியுள்ளார்.

‘குறிப்பிட்ட இலக்குகளை’ குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவலர் படை தெரிவித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சிபிஎஸ் செய்திகளின்படி, அமெரிக்கா சில ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியுள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள், ‘இந்த அச்சுறுத்தல்கள் தேவையான இடங்களில் தடுக்கப்படுகின்றன’ என்று கூறியுள்ளது. இஸ்ரேல் பிரதமர் போர்க் கால அமைச்சரவைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

**என்ன நடந்தது?**

ஆளில்லா விமானம் இதுவரை இஸ்ரேலை வந்தடைந்ததா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஈரான் இஸ்ரேலில் இருந்து 1,800 கி,மீ தொலைவில் உள்ளது. அதேநேரம், ஆளில்லா விமானங்களை எங்கு வீழ்த்தியது என்பதை அமெரிக்கா தெரிவிக்கவில்லை.

இஸ்ரேல், லெபனான் மற்றும் ஈராக் ஆகியவை தங்கள் வான்வெளியை மூடியுள்ளன. சிரியா, ஜோர்டான் ஆகியவை தங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகளை



எச்சரிக்கைப்படுத்தி வைத்துள்ளன.

(16ம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேல் மீது ஈரான் திடீர்...

ஏப்ரல் 1ஆம் தேதி சிரிய துணைத் தூதரகம் தாக்கப்பட்ட பிறகு, ஈரான் பழி வாங்கும் விதமாகப் பேசியது. இந்தத் தாக்குதலில் உயர்மட்ட தளபதி உள்பட 7 ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் பொறுப்பு என ஈரான் கூறியது. ஆனால், இஸ்ரேல் இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தவோ நிராகரிக்கவோ இல்லை.

**இஸ்ரேல் ராணுவம் கூறுவது என்ன?**

இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி, "ஈரான் மண்ணில் இருந்து இஸ்ரேலின் மீது ஈரான் நேரடித் தாக்குதல்களை நடத்தியுள்ளது," என்றார்.

"ஈரான் இஸ்ரேலை நோக்கி அனுப்பு கொலையாளி ட்ரோன்களை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். இது மிகவும் தீவிரமானது மற்றும் அபாயகரமானது," என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் விமானப்படை விமானங்கள் வானில் எந்தவிதமான அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

ஈரான் ஆளில்லா விமானத்தை விடுவித்ததைத் தொடர்ந்து, நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் செயல்பாட்டில் வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

"தற்காப்பு அல்லது தாக்குதல் என்ற எந்த சூழ்நிலைக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இஸ்ரேல் தேசம் பலமானது. இஸ்ரேல் பாதுகாப்புப் படை வலுவாக உள்ளது. மக்கள் வலிமையானவர்கள்," என்றார்.

மேலும், அமெரிக்காவுடன், பிரிட்டன், பிரான்ஸ் மற்றூம் பல நாடுகளும் எங்களுக்கு ஆதரவளித்து வருவதைப் பாராட்டுவதாக நெதன்யாகு கூறினார்.



இந்த வாரத் தொடக்கத்தில், இஸ்ரேலின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் ஈரான் இஸ்ரேலை தாக்கினால், ஈரானுக்குள் பதிலடியைக் கொடுக்கும் என்று எச்சரித்தனர்.

ஈரான் தாக்குதலின் செய்திக்குப் பிறகு, அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர் ஏட்ரியன் வாட்சன், இஸ்ரேலை பாதுகாப்பதில் அதிபர் பைடன் உறுதியாக இருப்பதாகக் கூறினார்.

ஈரானின் இந்த அச்சுறுத்தல்களுக்கு எதிராக இஸ்ரேல் மக்களுடன் அமெரிக்கா நின்று அவர்களைப் பாதுகாக்கும் என்றார்.

"அதிபர் பைடன் தெளிவாக இருக்கிறார். இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான எங்கள் ஆதரவு உறுதியாக உள்ளது."

பிரட்டன் பிரதமர் ரிஷி சுனக், ஈரானின் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். அதோடு, இஸ்ரேல் மற்றும் அதன் அனைத்து பிராந்திய கூட்டாளிகளின் பாதுகாப்பிற்காக நிற்பதாக உறுதியளித்துள்ளார்.

சிரிய தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஈரானின் தூதரகம் மீதான தாக்குதல் உட்பட, இஸ்ரேலின் தொடர்ச்சியான குற்றங்களுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈரானிய ராணுவத்தின் மிகவும் சக்திவாய்ந்த பிரிவான ஐ.ஆர்.ஜி.சி கூறுகிறது.

**கவலை தெரிவித்த ஐ.நா.**

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தேரஸ், "பிராந்திய அளவிலான பேரழிவு அதிகரிப்பின் ஆபத்து குறித்து ஆழ்ந்த கவலையுடன்" இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "இன்று மாலை ஈரான் இஸ்லாமிய குடியரசினால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட பெரிய அளவிலான தாக்குதலை நான் கடுமையாக கண்டிக்கிறேன். இந்த விரோதங்களை உடனடியாக நிறுத்துமாறு நான் அழைப்பு விடுக்கிறேன்," என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இஸ்ரேல் மீது ஈரானின் ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல் தொடர்பாக ஐநா பாதுகாப்புக் கவுன்சில் அவசர கூட்டத்திற்காக ஞாயிற்றுக்கிழமை கூடும் என்று அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த அவசர கூட்டத்தைக் கூட்டுமாறு இஸ்ரேல் கேட்டுக்கொண்டுள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தலைவர் வனேசா ஃப்ரேசியருக்கு இஸ்ரேல் எழுதிய கடிதத்தில், இந்த தாக்குதல்கள் "சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் ஹமாஸ், லெபனானில் ஹெஸ்புல்லா மற்றும் ஏமனில் ஹூத்திகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஈரான் தனது சர்வதேச கடமைகளை மீறுவதாகவும், "பல ஆண்டுகளாக ஸ்திரமின்மையின் சிற்பியாக" இருப்பதாகவும் அந்தக் கடிதம் குற்றம் சாட்டியுள்ளது.

"தாக்குதல்களின் அளவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உள்ளது. மேலும், இது இஸ்ரேலின் இறையாண்மை, சர்வதேச சட்டம் மற்றும் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை அப்பட்டமாக மீறுவதாகும்" என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானிய ஆயுதப் படைகளின் முதன்மைப் பிரிவான இஸ்லாமியப் புரட்சிக் காவலர் படையை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்குமாறு இஸ்ரேல் கோரியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தலைவருக்கு ஈரான் எழுதிய கடிதத்தில், "ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் 51-வது பிரிவில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி தற்காப்புக்காகவும், இஸ்ரேலின் தொடர்ச்சியான ராணுவ ஆக்கிரமிப்புக்கு பதிலளிக்கும் விதமாகவும்" செயல்பட்டதாகக் கூறியுள்ளது. ●

